விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 11 வெள்ளிக்கிழமை (27.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

## கொரோனாவின் உக்கிரத்தால்
# நாடு மிக மோசமான நிலையை எட்டியுள்ளது
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸின் உக்கிரதாண்டவத்தால் நாடு மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் நலிந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனா +4,597

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 4,597 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் 15

### வவுனியாவில் 6 மாத குழந்தை கொரோனாவால் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியாவில் 6 மாத குழந்தை ஒன்று கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்ட 15

## காபூல் விமான நிலையத்தில் பயங்கரமான குண்டுவெடிப்பு
### 13 பேர் பலி; 54 பேர் படுகாயம்

(காபூல்)
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் அமைந்துள்ள ஹமிட் கர்ஸாய் விமான நிலையத்தின் வெளிப்பகுதியில் நேற்றிரவு 15



### யாழில் தனியார் வங்கியில் 12 பேருக்கு கொரோனா

40 உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தலில் 06ஆம் பக்கம் பார்க்க

### அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் உயர்வடையும்

அமைச்சர் மகிந்த அமரவீர 05ஆம் பக்கம் பார்க்க

### நாட்டில் தொற்றாளர்கள் 40 வீதத்தால் அதிகரிப்பு

உலக சுகாதார ஸ்தாபனம் 03ஆம் பக்கம் பார்க்க

### முல்லையில் 150 கிலோ கஞ்சா மீட்பு

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 கிலோ கிராம் கஞ்சாப் பொதி மீட்கப்பட்டுள்ளது. 15

### வலி.மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயம் கொரோனாவால் முடக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வலி.மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலய பணியாளர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் காரியாலயம் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதாக 15

### நாட்டில் ஒரே நாளில் 209 பேர் உயிரிழப்பு
8 ஆயிரத்தை கடந்த பலியெடுப்பு

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 209 பேர் மரணித்துள்ளதாக நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 15

## வவுனியாவில் 269 பேர் உட்பட வடக்கில் 353 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் 269 பேர், யாழில் 53 பேர் உட்பட வடக்கில் 353 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 443 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 109 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு. 15

### உயிரிழப்பைத் தடுக்க கோவிட் தடுப்பூசி அவசியம்
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலை ஆய்வில் தகவல்

(கொழும்பு)
சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்களைவிட 50 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்பு விகிதம் 8.1 மடங்கு அதிகம் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பைசர், அஸ்ட்ரா 15

### நாட்டை மேலும் 2 வாரங்கள் முடக்குங்கள்
ரணில் வலியுறுத்து

(கொழும்பு)
கோவிட்-19 தொற்றுநோய் பரவ 15

### யாழில் 4 பேர் உட்பட வடக்கில் கோவிட்டால் 6 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 4 பேர் உட்பட வட மாகாணத்தில் கொரோனாத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த சூரியன், செவ்வாய் - 10, ரோகினி நட்சத்திரம், இடபராசி முதலாம் பாதம், தனியார் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

சீதனம் பெரிதளவில் எதிர்பார்க்கப்படவில்லை.

(7811)

077 582 7035

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


# மரண அறிவித்தல்



பிறப்பு 04 – 05 – 1982

இறப்பு 26 – 08 – 2021

## திருமதி யோதினி சந்திரமோகன்

யாழ். கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோதினி சந்திரமோகன் நேற்று (26.08.2021) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் அன்ரன் - எலிசபெத்ராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற சங்கரன் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரமோகனின் அன்பு மனைவியும் தேவராஜ்சின் அன்பு தாயாரும் புஸ்பலதா, செபநேசன் (நிக்சன்), சுவந்தினி, கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2585)

இல. 262/3V, கொழும்புத்துறை

076 545 1319

தகவல்:- குடும்பத்தினர்

# கொரோனா பரவலை கட்டுப்படுத்த விஞ்ஞானபூர்வமாக முடக்கல் நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காக நாட்டை முடக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். எனினும், விஞ்ஞானபூர்வமாக நாடு முடக்கப்படவில்லை. மாறாக 'லொக் டவுண்' கோரிக்கையை விடுத்தவர்களின் வாயை மூடும் விதத்திலேயே தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. இவ்வாறு தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஒருங் கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, நாட்டில் பயணத் தடை முறையாக அமுல்படுத்தப்படவில்லை. நாட்டிலுள்ள பாதிப்பேர் தொழிலுக்குச் செல்கின்றனர். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு நிதி அவசியம். ஆகவே, நீங்கள் வேலைசெய்யுங்கள் என அரசு கூறுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்தும் நோக்கிலேயே நாடு முடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக் கப்பட்டது. அந்தக் கோரிக்கை முறையாக நிறைவேற்றப்படவில்லை. மாறாக கோரிக்கை விடுத்தவர்களின் வாயை மூடும் விதத்திலேயே நாடு மூடப்பட்டுள்ளது. இதனை ஏற்கமுடியாது. எனவே, விஞ்ஞானபூர்வமாகவே முடக்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் விவகாரத்தை பயன்படுத்தி குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிரணி முயற்சிக்கின்றது எனவும், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே நாட்டை முடக்கும் கோரிக்கை அரசின் பங்காளிக் கட்சிகளால் விடுக்கப்பட்டது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

(ம-03)

# புலோலியில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள தற்போதைய சூழலில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 11 லீட்டர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட புலோலி, வராத்துப்பளையில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனையில் ஈடுபடுவதாக மக்கள் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்தை பருத்தித்துறை பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இதன்போது 11 லீட்டர் கசிப்பினை விற்பனைக்காக வைத்திருந்த 26 வயதுடைய சந்தேகநபரை சான்றுப் பொருளுடன் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-03,33)

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியலட்சுமி திருநாவுக்கரசு

(தனபாக்கியதேவி )




பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி திருநாவுக்கரசு நேற்று (26.08.2021) வியாழக் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கண்ணாடிக்கார சின்னையா - மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட பேர்த்தியும் காலஞ்சென்ற மாதவர் (பிரபல வர்த்தகர்) மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற திருநாவுக்கரசுவின் (திருமொழி அச்சக அதிபர் - சங்கானை) அன்பு மனைவியும் திருமதி சிவராஜன் லோகரட்சணியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரை செல்லக்கண்டு, காலஞ்சென்ற சண்முகலிங்கம் சிவராஜன் ஆகியோரின் மைத்துனியும் எழிலரசன் (MLT- மானிப்பாய் கிறீன் மெமோரியல் வைத்தியசாலை), நிதியரசன் (முதல்வர்- திருமொழி அச்சகம், சங்கானை), கதிரரசன் (பிரான்ஸ்), நிலாவரசி (ஆசிரியர்- புனித கென்றியரசர் கல்லூரி), முத்தரசன் (அதிபர் - தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராஜன் அகிலனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை) அன்புப் பெரியதாயாரும் பாமினி, கணேசமலர் (ஆசிரியர் - துணவி அ.மி.த.க. பாடசாலை), பிரணவரூபன் (ஆசிரியர் - மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயம்), சுவர்ணா (மேலதிக மாவட்டப் பதிவாளர்- பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாருஜா, திவ்யா, திருவரசன், மனோஜினி, எழிலினி (மாணவி - முதலாம் வருட யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடம்), வித்தகி, சாகித்யன், அபிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (26.08.2021) வியாழக்கிழமை இடம்பெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பண்ணாகம். (C2584) தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## செல்லையா பாலசுப்பிரமணியம்

வாரியத்தனை கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் முடக்காடு அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (25.08.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நீலாம்பிகையின் அன்புக் கணவரும் பகீரதன், பகீரதி, நவநீதன் (டென்மார்க்), பிரதீபன், யசிந்தன் (கனடா), நிஷாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகானி, சுனிந்தன் (வருமான பரிசோதகர் - வல்வெட்டித்துறை), மீனா (டென்மார்க்), சுபானந்தி (இலங்கை மின்சார சபை), தர்ஷி (கனடா), ரதீபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சீவன், மதுஷன், கம்சிகா, சஜித், அனித், மேனுஜன், அனுஷ்கா, லதுஷா, அக்ஷயன், கிருத்திக், அத்விக், அஜய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (27.08.2021) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(C-2583)

முடக்காடு, அரசடி

021 226 1437

076 499 4335

077 360 4910

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்
# குற்றவாளிகளை பாதுகாப்பதில் அரசு தீவிர கவனம்
## சர்வதேச மன்னிப்பு சபை விசனம்

(கொழும்பு)

**காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதில் இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் பின்நோக்கிச் சென்றுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்யுமாறு பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகின்றபோதும் இலங்கை அதனை நிறைவேற்றவில்லை.

மாறாக குற்றவாளிகளைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துகிறது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் அதிகளவானோர் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட நாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு தரவுகளின் அடிப்படையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

1980 களில் இருந்து அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் சேர்ந்த சுமார் 60, 000 முதல் 100,000 பேர் வரை இலங்கையில் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புக்களில் உள்ள பல இராணுவத் தளபதிகள் உட்பட அரச படைப் பிரிவுகள் கடத்தல், காணாமலாக கப்படுதல், சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படுவோர் பலர் இரகசியமாக வெளிநாடுகளில் வசிப்பதாக எந்த ஆதாரமும் இல்லாமல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

காணாமல் போனவர்கள் குறித்து உண்மையை கண்டறியவும் பொறுப்புக்கூறவும் ஏதுவாக கடந்த அரசாங்கம் காணாமல் போனோர் அலுவலகத்தை 2017 இல் திறந்தது.

இது இந்த விவகாரத்தில் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தியது.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை வெல்ல போராடியது.

எனினும் ராஜபக்ஷவின் இந்த அலுவலகத்துக்கான சமீபத்திய நியமனங்கள் அதன் சுதந்திரத்தை கடுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தின.

இதற்கிடையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் அவர்கள் சார்பில் முன்னிலையாகும் வழக்கறிஞர்கள் மற்றும் அமைப்புகளையும் ராஜபக்ஷ அரசாங்கம் பலமுறை துன்புறுத்தி அச்சுறுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசு தனது இந்தப் போக்குகளை மாற்றி பாதிக்கப்பட்டவர்களுக்குக்கான நீதியை உறுதி செய்ய முன்வர வேண்டும்.

அத்துடன் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.

குறிப்பாக ஆகஸ்ட் 30 சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தில் காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுடன் ஆதரவாக நிற்க வேண்டும் எனவும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# இந்தியாவை ஏமாற்றும் இலங்கை
## மிலிந்த மொரக்கொட நியமனத்திற்கு காசி ஆனந்தன் கண்டனம்

(சென்னை)

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொரக்கொட ஒரு இன வெறியாளர் என ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்திய அரசை ஏமாற்றுவதற்கு சிங்கள அரசாங்கம் மேற்கொள்ளும் இன்னொரு 'சூழ்ச்சி' நடவடிக்கையாகவே இந்த நியமனத்தை கருத வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.


கோட்டா - மஹிந்த தலைமையிலான இலங்கை அரசாங்கம் மிலிந்த மொரக்கொடவை இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகராக நியமித்துள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பை தூண்டியுள்ள நிலையில், ஈழத்தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தனும் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் மிலிந்த மொரகொட உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்று இந்தியா வந்துள்ளதை நினைத்து ஈழ மக்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஈழத்தில் சிங்கள குடியேற்றத்தை மேம்படுத்தி இலங்கையை முழுச் சிங்கள நாடாக மாற்றுவதன் ஊடாக இலங்கை உள் விவகாரங்களில் தலையிடும் உரிமையை இந்தியா இழந்து விடும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் திட்டம் எனவும் கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொள்ளும் வணிக உடன்படிக்கைகள் அல்ல



தமிழீழ மக்களுடன் செய்து கொள்ளும் தமிழீழத்தின் "தாயகப் பாதுகாப்பு உடன்படிக்கையே" இந்துமாக் கடல் பேரெல்லையில் இந்தியாவின் இருப்பை உறுதி செய்யும் என்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் ஈழத்தமிழர் நட்புறவு மையத்தின் தலைவர் கவிஞர் காசி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

# 12 யோக்கட்டுக்கு ஒரு அங்கர்
# யாழில் இந்த நிலை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோன தீவிர நிலை காரணமாக அரசாங்கத்தினால் நாடளாவிய ரீதியில் முடக்கல் நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலை, இறக்குமதி பிரச்சினை காரணமாக நாட்டில் சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதுடன் குறிப்பிட்ட சில பொருட்களின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வர்த்தகர்கள் பலர் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட அதிக விலைக்கு பொருட்களை விற்றல், சில பொருட்களைப் பதுக்குதல் போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய சுப்பர் மார்க்கட் ஒன்றில் இது போன்ற செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

அதாவது நாட்டில் தற்போது அங்கர் பால்மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பொது மக்கள் அங்கர் பல்மாவைத் தேடி அலைகின்றனர்.

குறித்த சுப்பர் மார்கெட்டில் அங்கர் பால்மா உள்ள போதிலும் நுகர்வோர் வாங்க முற்படும் போது கடை உரிமையாளர் 12 யோக்கட் வாங்கினால் மட்டுமே அங்கர் பால்மாவை வாங்க முடியும் என தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவிவரும் பொருட்களுக்கான தட்டுப்பாட்டு காலகட்டத்தில் இவ்வாறான வர்த்தகர்கள் சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.(4-7)

# இலங்கையில் தொற்றாளர்கள் எண்ணிக்கை
## 40 வீதத்தால் அதகரிப்பு-உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கை 40 வீதமாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைத்தீவு, இலங்கை, தீமோர்-லெசுடே சனநாயக குடியரசு தவிர்ந்த தென் கிழக்கு ஆசியாவின் சில நாடுகளில் கொவிட் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# நாட்டை முடக்குவதன் மூலம்
## கொவிட் தொற்றுக்கு தீர்வு காண முடியாது
### சுகாதாதர அமைச்சர் ஹெகலிய

(கொழும்பு)

நாட்டை முடக்கி கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு தீர்வு காணமுடியாது. அவ்வாறு தீர்வு கண்ட நாடுகள் இருக்குமா என்பது சந்தேகம். அதனால் மக்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதே அத்தியாவசியமாகும். அத்துடன் தனிமைப் படுத்தும் ஊரடங்கு சட்டத்தை நீடிக்காது என்றே நான் நினைக்கின்றேன் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டை முழுமையாக முடக்கி அதன் மூலம் நல்ல பெறுபேற்றை பெற்றதில்லை என்பதுவே எனது தனிப்பட்ட கருத்தாகும். அதனால் நாங்கள் இந்த நிலைமையை உணர்ந்து அனைவரும் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்றினால் எமக்கு கொவிட் நிலைமையை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரா ஒலிம்பிக்கில் இன்று களமிறங்கும் இலங்கையர்கள்




கடந்த 24 ஆம் திகதியன்று ஆரம்பமான டோக்கியோ பராலிம்பிக்கில் இன்றைய தினம் இலங்கையர்கள் மூவர் களமிறங்கவுள்ளனர்.

இதில் இலங்கை பங் கேற்கும் முதற் போட்டியாக ஆணகளுக்கான படகோட்டப் போட்டி அமைகிறது.

டோக்கியோ ஒலிம்பிக் நிறைவடைந்ததையடுத்து, தற்போது டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் நடைபெற்று வருகிறது.

இந்த டோக்கியோ பரா ஒலிம்பிக்கில்இலங்கையிலிருந்து எட்டு வீரர்களும், ஒரு வீராங்கனையுமாக 9 பேர் பங்கேற்கின்றனர். (4-6)

# இலங்கை வந்தடைந்தது தென்னாபிரிக்க அணி

வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி நேற்று அதிகாலை இலங்கை வந்தடைந்தது. தென்னாபிரிக்க அணி டோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் மூலமாக நேற்று அதிகாலை 2.15 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டுடன் இணைந்த அதிகாரிகள் குழு, அணியினரை வரவேற்க விமான நிலையத்திற்கு சென்றிருந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த தென்னாபிரிக்க அணியினர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகள் கொண்ட இச் சுற்றுப் பயணத்தின் . அனைத்து ஆட்டங்களும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறும். (4-6)



## பரா ஒலிம்பிக்

# அவுஸ்திரேலியாவுக்கு முதல் தங்கம்

டோக்கியோ பரா ஒலிம்பிக் போட்டியில் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் விளையாட்டுப் போட்டி கள் தொடங்கிய நிலையில், முதல் தங்கப் பதக்கத்தை அவுஸ்திரேலிய சைக்கிளிங் வீராங்கனை பெய்ஜ் கிரேகோ வென்றார்.

மகளிருக்கான சைக்கிளிங் போட்டியில் "சி 2 3" 3000 மீற்றர் பிரிவில் பெய்ஜ் கிரேகோ 3 நிமிஷம் 50.81 விநாடிகளில் இல்க்கை எட்டி முதலிடம் பிடித்தார். சீனாவின் வாங் ஜியாவ் மெய் 3 நிமிடம் 54.97 விநாடிகளில் வந்து வெள்ளியும், ஜேர்மனியின் டெனிஸ் ஷிண்ட் லர் 3 நிமிடம் 55.12 விநாடி களில் வந்து வெண்கலமும் வென்றனர். கிரேகோவுக்கு இது முதல் பரா ஒலிம்பிக் பதக்கமாகும்.

டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் முதல் நாளில் 7 விளையாட்டுகளில் 24 பதக்க போட்டிகள் நடைபெற்றன. (4-6)




## 'ஸ்கோர் என்ன? 1-0'

# இங்கிலாந்து ரசிகர்களுக்கு பதிலடி கொடுத்த சிராஜ்

லீட்ஸ் டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து இந்தியாவை வெறும் 78 ரனகளுக்கு சுருட்டி பின்னர் நாள் முடிவில் 42 ரன்கள் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஹசீப் ஹமீட் 60 ரன்களிலும் ரோரி பர்ன்ஸ் 52 ரன்களிலும் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் ஜேம்ஸ் அண்டர்சன் பந்துவீச்சில் 6 ரன்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மேலும் ஓவர் டன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


முதல் நாள் ஆட்டத்தின் கடைசி அமர்வில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் பவுண்டரி லைனில் பீல்டிங் செய்தபோது இங் கிலாந்து ரசிகர்கள் இந்திய அணியின் ஸ்கோர் என்ன எனக்கேட்டு கிண்டல் செய்தனர்.

அதற்கு சிராஜ் கைகளால் சைகை மூலம் 1-0 எனக் காட்டி பதிலடி கொடுத்தார்.

உண்மையில் தொடரில் இந்திய அணி இன்னும் 1-0 முன்னிலையில் உள்ளது.

முகமது சிராஜின் இந்த வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகிறது. (4-6)

# மூன்றாவது டெஸ்ட்; இந்தியா தடுமாற்றம்




இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின், முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி, நேற்று முன்தினம் நடைபெற்ற முதல்நாள் ஆட்டநேர முடிவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்களை பெற்றது.

ஆட்டநேர முடிவில் ரொறி பர்ன்ஸ் 52 ஓட்டங்களுடனும் ஹசீப் ஹமீட் 60 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இங்கிலாந்து அணி 42 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.




லீட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, 78 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 19 ஓட்டங்களையும் ரஹானே 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் அண்டர்சன் மற்றும் கிரைஜ் ஓவர்டொன் ஆகியோர் 3 விக்கெட்டுகளையும் ரொபின்சன் மற்றும் சாம் கர்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்களை பெற்றது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

27.08.2021
ஆவணி 11, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 8.13 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 2.52 மணிவரை
சுபநேரம் -6.05-7.35 மணிவரை
இராகு காலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம், அமிர்த சித்தம்

வளவன்


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


ரிஷபம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


மிதுனம்

எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,முயற்சிகள் கைகூடும்.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பேச்சில் இனிமை தென்படும், முன்கோபமும், அலைச்சலும் குறையும்.


கன்னி

குடும்ப உறவினர் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,ரோக பயமுண்டு, மனக்குழப்பங்கள் தோன்றி மறையும்.


துலாம்

காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


விருச்சிகம்

வழிபாட்டில் நம்பிக்கை கூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் , தாழ்ந்த சுபாவமுண்டு.


மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


கும்பம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உடன்பிறப்புக்களின் ஒத்துளைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாடு மகத்துவம் தரும்.


மீனம்

இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

இன்று முடிந்ததை இன்றே செய், நாளை வரை தள்ளிப்போடாதே

# அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கலாம்- மகிந்த அமரவீர


(கொழும்பு)

**எதிர்வரும் காலத்தில் மேலும் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடும் என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் நாட்களில் அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும். அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவது அந்தளவு சுலபமான விடயமல்ல.

பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்து அமைச்சரவையில் பேசியிருந்தோம். எனவே இது எமது நாட்டில் மாத்திரம் ஏற்பட்ட நிலை அல்ல. உலக சந்தையின் நிலவரம்.



மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் சீனி, எரிவாயு, பால்மாவின் இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டதால் அரசாங்கத்தின் வருமானம் குறைந்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் மேலும் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடும் என்பதால் யதார்த்தத்திற்கு முகங்கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பெற்றோரை காவு கொண்டது கொரோனா நிர்க்கதியான ஐந்து வயது சிறுமி


(கொழும்பு)

கிரிபத்கொட பகுதியில் தாயும் தந்தையும் தமது ஐந்து வயது மகளை தனியாக விட்டு விட்டு கொரோனாவால் உயிரிழந்த சோக சம்பவம் பதிவாகியுள்ளது.

உயிரிழந்தவர்கள் தனஞ்செய அனுருத்தா. 36 , மற்றும் அவரது மனைவி 27 வயது என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.தனஞ்செய கடந்த 22 ஆம் திகதி கொரோனா தொற்றால் உயிரிழந்தார். மற்றும் அவரது மனைவி நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

அவர்களின் ஐந்து வயது மகள் தனது அன்புக்குரிய தாய் மற்றும் தந்தையை இழந்த நிலையில் பெரும் துயரத்திற்கு ஆளாகியுள்ளார். (நி-5)

# முடக்க கட்டுப்பாடுகளை நீடியுங்கள்



## ரணில் பரிந்துரை

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்க கட்டுப்பாடுகளை நீடிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் இதனை மேற்கொள்ள அரசாங்கம்,ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-5)

# கொரோனா சிகிச்சையின் பின் வீடுதிரும்பிய அக்காவை ஏற்காத தம்பி

(களுத்துறை)

களுத்துறையில் கொவிட் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வீட்டிற்கு வந்த அக்காவை தம்பி ஒருவர் வீட்டை விட்டு துரத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பல்லேவெல பிரதேசத்தை சேர்ந்த 74 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு துரத்தப்பட்டுள்ளார். இதனால் அவர் 3 நாட்களாக வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள பகுதியில் வசித்து வருகின்றார்.

தனது ஒரே சகோதரன் தன்னை இவ்வாறு வீட்டிற்கு அனுமதிக்காமையினால் அயலவர்களின் உதவியுடன் அவர் உயிர் வாழ்வதாக அவர் தெரிவித்தார்.

அந்த பெண் தனது சகோதரனுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்ற நிலையில் அண்மையில் கொவிட் தொற்றுக்குள்ளாகி மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

10 நாட்கள் சிகிச்சை பெற்றவர் கடந்த 21 ஆம் திகதி மீண்டும் வீட்டிற்கு வந்துள்ளார். இதனால் தனது சகோதரன் கதவை திறக்காமையினால் இறுதியாக சிகிச்சை பெற்ற போது அணிந்த ஆடையுடனேயே தற்போதும் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆடைகளை எடுப்பதற்கேனும் அறைக்குள் செல்ல தனது சகோதரன் அனுமதி வழங்குவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார பரிசோதகர்கள் அவ்விடத்திற்கு வந்து அவர் மூலம் இனிமேல் கொவிட் தொற்றாதென்பதனை தெளிவுப்படுத்திய போதிலும் சகோதரன் அதனை நிராகரித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாவுடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து படகு ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வரப்பட்ட 139 கிலோ கிராம் கஞ்சாப் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வழமை போன்று கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றைச் சோதனையிட்ட போது படகினுள் கஞ்சா போதைப் பொருள் கடத்தி வரப்பட்டமை கண்டறியப்பட்டது.

கடற்படையினரைக்கண்டவுடன் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் அதனைக் கடலில் வீசிய நிலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருளின் பெறுமதி 4 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (4-7-18-36-60)

## மரணச் சடங்கில் கலந்துகொண்ட மூவருக்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் மரண சடங்கில் கலந்து கொண்ட மூவருக்கு கொரோனோ தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நயினாதீவில்வயோதிப பெண்மணி திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

அவரது மரணச் சடங்கில் ஊரவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்நிலையில் ஓரிரு நாட்களில் உயிரிழந்தவரின் சகோதரி உள்ளிட்ட சிலருக்கு திடீர் உடல்நல குறை ஏற்பட்டது. அதனையடுத்து அவர்கள் வைத்திய சாலைக்கு சென்றபோது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் மூவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. (4-7-33)

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

சமூக ஜோதி நீர்வை தர்மலிங்கம் பராசசிங்கத்தின் பவளவிழா நிகழ்வு இணைய வழியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான Zoom இலக்கம் 503 3636640. கடவுச்சொல் Para@2021 ஆகும். அனைவரையும் நிகழ்வில் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (4-7)



புங்குடுதீவு ஜே/26 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழ்கின்ற 270 குடும்பங்களுக்கு தீவகம் தெற்குப் பிரதேச செயலாளரினால் அனர்த்த முகாமைத்துவ நிதிஒதுக்கீடு ஊடாக ஒரு குடும்பத்திற்குத் தலா பத்தாயிரம் ரூபாய் பெறுமதிமிக்க உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்: ரவிசாந்)

## கசிப்பு மீட்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பகுதியில் கசிப்பும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தும் உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கடந்த 24 ஆம் திகதி கசிப்பு காய்ச்சுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சுமார் 5 லீற்றர் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களை கைப்பற்றியுள்ளனர்.

எனினும் கசிப்பு காய்ச்சியவர்கள் தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7-104)

# யாழ்.கொமர்ஷல் வங்கி பிரதான கிளையில் 12 பேருக்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் பிரதான கிளையில் பணியாற்றும் 12 பேருக்கு கொவிட் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அந்தக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டது.

அத்துடன், அந்தக் கிளையில் பணியாற்றும் 40 உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்பு தொழிலாளிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணம்பிரதான கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகள் என 34 பேரிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவர்களில் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் உட்பட 12 பேருக்கு கொவிட் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் அங்கு பணியாற்றும் 40 உத்தியோகத்தர்களை சுயதனிமைப்படுத்தி கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணம் பிரதான கிளையை தற்காலிக மூட மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்தினார். (4-7-18-33)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று 15ஆம் திருவிழா




### வேரோடு பிடுங்கி எறி... எம் வேதனைதான் தீர எழு...

நல்லை நகர்க்கந்தா! நாம் வணங்கும் தமிழ் குமரா!
எல்லையிலாக் கடலாக எழுந்தடியார் வந்திணையும்
சொல்லரிய புகழாண்ட சுந்தர நீ கொடியேறி
நல்விதம் உள்வீதி நயக்கின்றாய் என்றறிந்தோம்...

என்னவிதம் இந்தநிலை எழுந்ததடா உந்தனுக்கு
வாய்மூடி, முகம்மூடி வாட்டமுற்று உன்னடியார்
தேடுவழி ஏதென்று தேம்புகிறார் உனை நினைந்து...

கற்பூரச் சட்டி எங்கே...? கானமிசை குழு எங்கே...?
சுற்றிவரு பிரதட்டை சுந்தரியார் அடியழிப்பு
பக்திநிறை நேர்த்தியதால் பறந்துவரும் காவடிகள்
சொற்பொழிவு ஆலயங்கள் சுகந்தமிகு இன்னிசைகள்
பற்பலவாம் வாத்தியங்கள், நீ..., பவனிவர ஒலிக்குமடா..

இத்தனையும் எங்கே...? இந்த நிலையா உனக்கு...?
ஆறுமுகம் பன்னிரு கை அடக்கியவன் சூரனை நீ
கோரமிகு கொரோனாவின் கொந்தளிக்கும் ஆணவத்தை
வேரோடு பிடுங்கி எறி... எம் வேதனை தான் தீர எழு...



கலைமாமணி
கலைஞானச்சுடர்
தீவக தியாகன்

### கோழிக்கொடியோன் பாதம் நெஞ்சுருகி நினைந்திடுவோம்

"தெய்வமணம் வீசும் நல்லூர் வீதி
விழுந்தொருகால் கும்பிட்டால்
வில்லங்கம் அகன்றிடுமே- விண்ணவர்
கோன் பெருமானை- விரும்பி
நாமும் நெஞ்சுருகி நினைந்துமே
நித்தமும் ஏத்திடுவோம்- எம் பதியில்
கொள்ளை நோய் அழிந்திடுமே
கோழிக்கொடியோன் பேரருளால்"



பாலசுப்பிரமணியம்
வேலணைபாலா, ஜே.பி.

### ஆன்மிக ஞானத்தை வழங்கிடு வேலவா

சுட்ட பழம் வேணுமா சுடாதபழம் வேணுமா
எனக் கேட்டு ஞானப்பழத்தை
ஔவைக்குக் கொடுத்த வேலனே முருகா
ஒருவேளை கூட அன்னமில்லாமல்
அல்லலுறும் உம் அடியவரின்
பசிதனைப் போக்கி
ஆன்மிக ஞானத்தை வழங்கிடு வேலவா



கரிகாலன், ஊரெழு.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நல்லூரான் கவிதைகளை 076 636 3378 என்ற Viber இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டாவை விட ஆபத்தான புதிய வைரஸ்கள் உருவாகலாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**டெல்டாவினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அதிகாரிகள் உணர்ந்துகொண்டு நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தொடர்ச்சியான முடக்கல்களால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனா வைரஸிற்கு பின்னர் ஏற்பட்ட பிறழ்வுகள் மிகவும் ஆபத்தானவை என தெரிவித்துள்ள அச்சங்கம் எதிர்காலத்தில் மிகவும் ஆபத்தான மாற்றமடைந்த வகைகள் உருவாகலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இரண்டு டோஸ்களை செலுத்திக்கொண்ட பின்னரும் பாதிக்கப்படுபவர்கள். உயிரிழப்பவர்கள் குறித்து தகவல்கள் வெளியாகும் காலத்தில் நாங்கள் இருக்கின்றோம். நாடு தற்போது மிகவும் ஆபத்தான உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய வலுவான கொரோனா வைரஸினை எதிர்கொள்கிறது.

இதன் காரணமாக நாங்கள் நிலைமையை உணர்ந்து இன்னுமொரு பிறழ்வடைந்த வைரஸினை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். இன்னுமொரு பிறழ்வடைந்த வைரஸ் ஐந்தாவது அலைக்கு வித்திடலாம். இது டெல்டாவை விட ஆபத்தானதாக காணப்படக்கூடும். நாட்டினால் இதனை எதிர்கொள்ள முடியாது எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. (நி-5)



## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

### நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி



"ஓம்" எனும் பிரணவ மந்திரம் எல்லாவற்றுற்கும் மூலமாக அமைந்துள்ளது. "ஓம்"எனும் வடிவமாகவும், பிரணவ பொருளாகவும் விநாயகர் விளங்குகிறார் .

"விநாயகர்" என்றால் "தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்" என்று பொருள். விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவார். குணங்களின் தலைவரான கணபதியை உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு வருகின்ற விக்கினங்கள், வில்லங்கங்கள், இடர்கள் இடையூறுகள் அனைத்தும் விலகி ஓடும். எனவே தான் அன்று தொட்டு இன்றுவரை அனைவரும் விநாயகர் பூஜையை முதலில் கொண்டாடி வருகிறோம்.

"சதுர்த்தி" என்பது ஒரு 'திதி". ஒவ்வொரு மாதமும் வளர்பிறை யிலும், தேய்பிறையிலும் வருகிற நான்காவது நாள் சதுர்த்தி ஆகும். சதுர்த்தியன்று விநாயகப்பெருமானை நோக்கி விரதம் அனுசரிப்பது இந்துக்களிடையே வழக்கமாக உள்ளது.

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் நான்காம் நாளன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இது விநாயகப் பெருமான் பிறந்த தினமாகும். விநாயகர் அவதாரம் மகிமை வாய்ந்தது. கயமுகன் என்ற அரக்கன் சிவபெருமானிடம் வரங்கள் பல பெற்றிருந்தான். அந்த வரத்தின் மகிமையால் தேவர்களைவும், மனிதர்களையும் கொடுமைப்படுத்தி வந்தான்.

தேவர்களை பூண்டோடு அழித்தொழிக்க எண்ணினான். அவன் கொடுமை தாங்காத தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர் . கஜமுகனை சம்ஹாரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்காக விநாயகப்பெருமான் சதுர்த்தியன்று அவதரித்தார். விநாயகர் கயமுகனுடன் போர்புரிந்த போது ஆயுதங்களால் அழியாத வரம் பெற்ற கஜமுகன் பெருச்சாளி உருவம் கொண்டு விநாயகரை தாக்கினான். விநாயகர் அவனை தன் வாகனமாக்கி அருள்புரிந்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசி விலை அதிகரிப்பிற்கு இடமளிக்க முடியாது

### வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் அரிசியை 100 ரூபாவிற்கும் குறைந்த விலையில் மக் களுக்கு வழங்க ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை ஏகமனதாக தீர்மா னித்துள்ளதாக. வர்த்தக அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் விநியோக வலையமைப்பு முடங்கியுள்ளதால். பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் போக்கு உள்ளதாகவும் முடக்கல் நிலை கார ணமாக நூல் அறுந்த பட்டத்தைப் போன்று பொருட்களின் விலைகள் அதிகரித்து செல்வதாகவும் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலைமையில். மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியின் விலை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## 2000 ரூபாய் கொடுப்பனவு கிடைக்காதவர்கள் முறையிடலாம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்படும் 2000 ரூபாய் கொடுப்பனவு கிடைக்காத வர்கள் அது குறித்து பிரதேச செயலாளர்களிடம் முறை யிட முடியும்.

நாடு முழுவதும் பல பகுதிகளில் குறித்த 2000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப் படுவதாக பொருளாதார மறு மலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்ட இடங்களில் அவற்றினை பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் அது குறித்து பிரதேச செயலாளர்களிடம் முறை யிட முடியும் என குறித்த செய லணி அறிவித்துள்ளது.

இதேவேளை 2000 ரூபாய் கொடுப்பனவை உடனடியாக மற்ற பகுதிகளுக் கும் வழங்குவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது. (நி-5)

## உதவி கொறடாவாக பிரமித்த பண்டார நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஆளும் கட்சியின் உதவி கொறடாவாக பாராளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் நேற்று நியமிக்கப்பட்டார்.

2021செப்டெம்பர்முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

# பத்து நாட்களாக எரியும் வனம்;

# ஒரு லட்சத்து 17 ஆயிரம் ஏக்கர் நாசம்

(எல்டொரோடா)

**அமெரிக்காவில் கலிபோர் னியா மாகாணத்தில் உள்ள எல்டொரோடா வனப்பகுதியில் 10 நாட்களாக தொடர்ந்து காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது.**

தீயினால் விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை சூழ்ந்து இருப்பதால் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும் ஹெலிகாப்டர் மூலம் தீயை அணைக் கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

10 நாட்களாக தொடர்ந்து எரியும் காட்டுத்தீயால் இது வரை சுமார் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி தீயால் கருகி உள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7-4)

## மீண்டும் திறக்கப்பட்ட வங்கிகள் பணம் இல்லாததால் திரும்பிய மக்கள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் 10 நாட்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த வங்கிகள் நேற்று முன்தினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

வங்கிகள் திறக்கப்பட்டதால் தங்கள் கணக்குகளில் சேமிப்பில் உள்ள பணத்தை எடுக்கும் நோக்கத்தோடு நூற்றுக்கணக்கானோர் வங்கி முன் குவிந்தனர்.

வங்கிகளில் போதிய கையிருப்பு பணம் இல்லாததால் பணம் எடுக்க வந்தவர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

முன்னதாக ஆப்கானிஸ்தான் மத்திய வங்கி, அமெரிக்காவின் மத்திய வங்கியில் சேமித்து வைத்துள்ள 7 பில்லியன் டொலர்கள், தங்கம் மற்றும் பணத்தை அமெரிக்க அரசு முடக்கி வைத்துள்ளது.

அதேபோல், ஆப்கானிஸ்தான் அரசுக்கு இந்த வாரம் ஒதுக்கப்படவேண்டிய 460 மில்லியன் டொலர்கள் பணத்தை சர்வதேச நிதியம் நிறுத்தி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், ஆப்கானிஸ்தானில் பெரும் பொருளாதார சிக்கல் ஏற்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. (7-4)

## தலிபான்கள் எல்லைகளை மூடினால் அகதிகள் நெருக்கடிக்கான வாய்ப்புண்டு

### பிரித்தானியா தெரிவிப்பு

அமெரிக்க துருப்புகள் வெளியேறுவதற்கான காலக்கெடு திகதியான எதிர்வரும் செப்டெம்பர் 31 ஆம் திகதிக்குப் பிறகு தலிபான்கள் ஆப்கான் எல்லைகளை மூடினால், அது மிகப் பெரிய அகதிகள் நெருக்கடியை ஏற்படுத்தும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் கூறுகையில்.

ஆப்கானின் எல்லைப் பகுதிகள் சீரற்றதாகவும் மிகவும் நீளமாகவும் உள்ளது. எனவே அந்த நாட்டை வெளியுலகிலிருந்து துண்டிக்கும் அந்த முயற்சி தோல்வியடையும்.

எனவே நாட்டிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைய ஏராளமானவர்கள் முயல்வார்கள். இது மிகப் பெரிய அகதிகள் நெருக்கடியை ஏற்படுத்தும்' எனக் கூறினார்.

முன்னதாக பிரித்தானிய குடிமக்கள் மற்றும் தகுதியான ஆப்கானிஸ்தானியர்களை வெளியேற்றுவதற்கு தங்களது அரசாங்கம் கடைசித் தருணம் வரை பயன்படுத்தும் என்று டொமினிக் ராப் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக காபூல் விமான நிலையத்தை விட்டுத் தள்ளிச் செல்லுமாறும் பயணம் செய்ய வேண்டாம் என தங்களது குடிமக்களுக்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன. (7-4)

## சாட் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கொரோனாவுக்குப் பலி

(ந்ஜமேனா)

சிறைச்சாலையில் இருந்த சாட் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஹசனி கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

எதிர்க்கட்சியினருக்கு தூக்குத் தண்டனை விதித்தல் என பல்வேறு கொடூர செயல்களில் ஈடுபட்டார். இவரது ஆட்சி காலத்தில் சுமார் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியது. 2016 ஆம் ஆண்டு ஹசனி மீதான போர் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தற்கிடையில் சிறைவாசம் அனுபவித்து வந்த ஹசனிக்கு கடந்த வாரம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் அந்நாட்டின் தகர் நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# பாகிஸ்தான் அணு ஆயுதங்களை தலிபான்கள் கைப்பற்ற கூடாது

## அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள்


(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதால் உலக நாடுகள் மிகுந்த கலக்கம் அடைந்துள்ளன. அந்நாட்டில் பெண்களுக்கு பல்வேறு உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அதேபோல் அந்நாட்டில் பயங்கரவாத செயல்கள் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இது அண்டை நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்த அதிக வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக தலிபான்கள் பாகிஸ்தானில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்



பார்க்கப்படுகிறது. அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மையை சீர் குலைத்து இம்ரான்கான் ஆட்சியை கவிழ்க்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

அவ்வாறு நிகழும் பட்சத்தில் அந்நாட்டில் உள்ள அணு ஆயுதங்களை தலிபான்கள் கைப்பற்றும் மிகவும் ஆபத்தான நிலை உருவாகலாம்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியுள்ள தலிபான்கள் பாகிஸ்தானை சீர்குலைக்க அனுமதிக்கக்கூடாது என அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ஜோ பிடனிடம் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களை தலிபான்கள் கைப்பற்றாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என ஜோ பிடனிடம் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4)

## தடுப்பூசிகளில் கலப்படம்

(டோக்கியோ)

ஜப்பானுக்கு வந்த மொடர்னா கொவிட் தடுப்பூசிகளில் கலப்படம் உள்ளதாகத் தெரிவித்து, 16.3 இலட்சம் தடுப்பூசிகளை ஜப்பான் பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்துள்ளது.

5.6 இலட்சம் தடுப்பூசி மருந்து குப்பிகளைக் கொண்ட ஒரு தொகுதியில் சிலவற்றில் மருந்து அல்லாத வேறு கலப்பட பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக ஜப்பான் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

முன்னெச்சரிக்கை காரணமாக மூன்று தொகுதி மருந்துகளை மொடர்னா நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளதாக ஜப்பானில் மொடர்னா தடுப்பூசியை விநியோகம் - விற்பனை செய்யும் டகேடா மருந்து நிறுவனம் கூறியுள்ளது.

ஜப்பான் மக்கள் தொகையில் 40 வீதம் பேர் இதுவரை முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டார்கள்.

சுமார் 50 வீதமானோர் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7-4)

## காபூலில் முதல்முறையாக சீனா - தலிபான்கள் பேச்சு

(பிஜிங்)

ஆப்கான் தலைநகர் காபூலில் தலிபான்களுடன் முதல் முறையாக பேச்சுவார்த்தை நடத்தியதாக சீனா தெரிவித்துள்ளது. இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில், தலிபான்களுடன் முதல்முறையாக தூதரகத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம். அவர்களுடன் எந்த வித தடையுமில்லாமல் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இரு தரப்பிலும் தகவல்களும் ஆலோசனைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமான விவகாரங்களில் இருதரப்பு பேச்சுவார்த்தைக்கும் காபூல் நகரம் முக்கிய தளமாகத் திகழ்கிறது.

ஆப்கான் மக்களின் உணர்வுகளையும் சுதந்திரத்தையும் சீனா மதிக்கிறது.

அந்த நாட்டின் எதிர்காலம் குறித்து அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்பதில் சீனா உறுதியுடன் உள்ளது எனத் தெரிவித்தார். (7-4)

## கொரோனா தடுப்பூசி போடாதவர்களுக்கு பாகிஸ்தானில் உலாவ அனுமதி இல்லை

(இஸ்லாமாபாத்)

முழுமையாக கொரோனா தடுப்பூசி போடாதவர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் பொதுப் போக்குவரத்துக்கு அனுமதி இல்லை என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

மேலும் ஒக்டோபர் 15க்குப் பிறகு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் வேலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

செப்டெம்பர் 30க்குப் பிறகு விமானப் பயணத்திற்கு தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 31 முதல் தடுப்பூசி போடாதவர்கள் ஷாப்பிங் மால்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

முதல் தவணை தடுப்பூசி போட்டவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் 29 வரை ஷாப்பிங் மால்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். அதன் பிறகு முழுமையாக தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு.

செப்டெம்பர் 30 க்குப் பிறகு முழுமையாக தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மட்டுமே திருமண விழாக்களில் அனுமதி, ஹோட்டல்களில் அனுமதி, நெடுஞ்சாலைகளில் பயணம் செய்ய ஒரு தவணையாவது தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பிரஜைகளுக்கு வீடுகளில் தடுப்பூசி



(மன்னார்)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவினால் இவ்வாராம் தேசிய தடுப்பூசி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் நீண்ட கால சுகயீனமுற்ற முதியவர்கள் மற்றும் நோயினால் பாதிக்கப்பட்ட மூத்த பிரஜைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று மன்னார் , வவுனியா மாவட்டம் முழுவதும் இடம் பெற்றது.

மன்னார் ,வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை இணைந்து குறித்த தடுப்பூசி செலுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.

மன்னார் நகர், முசலி, நானாட்டான், மடு,மாந்தை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் முற்பதிவு மேற்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு அஸ்ராசெனேகா தடுப்பூசிகளின் முதல் டோஸ் மேற்படி நேற்றைய தினம் வழங்கப்பட்டது.(7-4-6-285-299)

# ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை பூரணப்படுத்தவும்

(மன்னார்)

சுற்றாடலுக்கு ஏதுவான சேதனப் பயிர்ச்செய்கை மற்றும் சேதனப் பசளையைப் பிரபல்யப்படுத்தும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2021/22 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது நெற்செய்கையை மேற்கொள்ளும் வயல்களின் பொருட்டு இயற்கைத் திண்மத் தாவரப் போஷாக்கு (சேதனப்பசளை) ஊக்குவிப்பு கொடுப்பனவுக் கான விண்ணப்பப்படிவங்கள் மன்னார் மாவட்டத்தின் சகல கமநலசேவைகள் நிலையங்களிலும் விநியோகிக்கப்படுகின்றன.

எனவே,மேற்படி கொடுப்பனவைப் பெறுவதற்குப் பொருத்தமான கமக்காரர்கள் தங்கள் பிரிவுக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று சரியாகப் பூரணப்படுத்தி 31.08. 2021 ஆம் திகதிக்கு முன்னர் மீள ஒப்படைக்குமாறு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அ.மரின்குமார் சகல கமக் காரர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 16 வரையான சகல பகுதிகளும் விண்ணப்பதாரியினாலேயே சரியாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய சரியாகப்பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை உரியகமக்காரர் ஒழுங்கமைப்பின் சிபாரிசுடன் தங்கள்பிரிவுக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தரிடம்31.08.2021 ஆம் திகதிக்கு முன்னர் மீளகையளிக்கவும் எனவும் தெரிவித்தார். (7-4-6)

# சிறியபாலத்திற்கு அருகில் புதிய பாலம் அமைக்கப்பட வேண்டும்

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

மாறி அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு அருகில் புதிய பாலத்தினை விரைவாக அமைக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.



மன்னார் யாழ்ப்பாணம் ஏ-32 சாலையில் பல்லவராயன்கட்டுச் சந்தியில் சிறிய பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குறித்த சிறிய பாலம் ஊடாக கரியாலைநாகபடுவான்குளம், பல்லவராயன் கட்டுக்குளம் என்பவற்றின் நீர் மழை காலத்தில் கடந்து செல்ல முடியாமல் பல்லவராயன்கட்டு வயல் நிலங்களை மூடி நீர் காணப்படும்.

தற்போது உள்ள சிறிய பாலத்திற்கு அருகில் பெரிய பாலம் ஒன்று அமைவதன் மூலமாகவே இரு குளங்களின் நீர் ஏ-32 சாலையினை கடந்து கடலுக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்படும். இப்பகுதியில் அமைய வேண்டிய இரு பாலங்களும் முழங்காவில் பக்கமாக ஒரு கிலோமீற்றர் தூரத்தில் மாறி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியுடன் தொடர்புடைய திணைக்களம் புதிய பாலம் அமைப்பதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டும். இல்லையேல் மழை காலத்தில் வெள்ள இடர் மிகுந்த பகுதியாக பல்லவராயன்கட்டுச் சந்தி விளங்கும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-4-6-350)

# யானைகளின் அட்டகாசத்தால் பூசணிச் செய்கை அழிவு



(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகைபுரம், முக்கொம்பன் கிராமங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த பெருமளவு பூசணிக் காய்களை யானைகள் தமது உணவாக்கி உள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. கண்ணகைபுரம், முக்கொம்பன் கிராமங்களில் விவசாயிகளினால் மேட்டுப் பயிர்ச்செய்கை மூலம் பெருமளவு நிலப்பரப்பில் பூசணிச் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இரவு இப்பகுதி காட்டின் வழியாக பூசணித் தோட்டத்திற்குள் நுழைந்த யானைகள் பெருமளவு பூசணிக்காய்களை தமது உணவாக்கி உள்ளன. இதனையடுத்து விவசாயிகள் எஞ்சியுள்ள பூசணிக்காய்களை அறுவடை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (7-4-6-350)

# வைத்தியருக்காக காத்திருக்கும் வன்னேரிக்குள மக்கள்

(அக்கராயன் )

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கும்படி இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமத்தில் 25 ஆண்டுகளாக பணியாற்றிய வைத்தியர் 2006 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்று சென்றதையடுத்து இதுவரை நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை.

வன்னேரிக்குளம் கிராமத்தில் 500 வரையான குடும்பங்களும் ஆனைவிழுந்தான் குளத்தில் 500 வரையான குடும்பங்களும் வன்னேரிக்குளம் வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாததன் காரணமாக 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கே செல்ல வேண்டி உள்ளனர்.

வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியர் நியமிக்கப்படாததன் காரணமாக பாம்புக்கடி, விபத்துகள், மகப்பேறு போன்ற பல்வேறு நெருக்கடியான நேரங்களில் அக்கராயன் வைத்தியசாலையினை நோக்கி நோயாளர்கள் செல்ல வேண்டியுள்ளனர்.(7-4-6-350)

# காணிக்கிளையின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளையின் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளது.

குறித்த கிளையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (7-4-6-299)

# ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான 2000 ரூபா வழங்கி வைப்பு

(தர்மபுரம்)

அரசாங்கத்தின் எவ்வித உதவித்தொகையும் பெறாத ஊரடங்கு விதிக்கப்பட்டதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2000 ரூபா உதவிக் கொடுப்பனவு கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களிலும் சுமார் 2500 பேருக்கு கிராம உத்தியோகத்தர்களால் வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கிவைக்கப்பட்டது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகத்துக்கு 1130 பேருக்கும், கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு 430 பேருக்கும், பூநகரி பிரதேச செயலகத்துக்கு 670 பேருக்கும், பச்சிலைப் பள்ளிபிரதேச செயலகத்துக்கு 270 பேருக்கும், மொத்தமாக சுமார் 2500 பேருக்கு வழங்கிவைக்கப்பட்டது. (7-4-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவை குறித்து அவதானம் செலுத்துங்கள்

## இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் இலங்கைக்கு ஒட்சிசன் வழங்குவது தொடர்பில் முன்னுரிமை வழங்குமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் கோபால் பாக்லேவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலைவிற்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு சுவசிறிபாய - சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதன்பின்னர் குறித்த சந்திப்புத் தொடர்பில் சுகாதார அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. அதில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நடமாடும் ஒட்சிசன் தொகுதிகளை நாட்டிற்கு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நடமாடும் ஒட்சிசன் தொகுதி தற்போதைய நிலையில் மிகவும் அத்தியாவசியமானதொன்று எனவும், ஒட்சிசன் தேவைப்பாடு தொடர்பில் முன்னுரிமை வழங்கி, இந்திய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இதன்போது சுகாதார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் Tocilizumab மருந்தை இலங்கைக்கு வழங்குவது தொடர்பிலும் இந்திய கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (நி-5)

# உயர்தர பரீட்சையை பிற்போடுங்கள்

## ஜனாதிபதிக்கு மாணவர்கள் அவசர கடிதம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அடுத்த ஆண்டு பெப்ரவரி வரை பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரி 2021 உயர்தர மாணவர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கொரோனா வைரஸ் உட்பட, கல்வியைப் பாதித்த எட்டு முக்கிய பிரச்சினைகளை இந்த கடிதம் எடுத்துக்காட்டுகிறது.

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முன்னர் அனைத்து மாணவர்களும் அவர்களின் குடும்பங்களுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பாடத்திட்டத்தை உள்ளடக்க அதிக நேரம் தேவைப்படுவதால் நவம்பரில் பரீட்சையை நடத்துவது நடைமுறைக்கு ஏற்றது இல்லை என்றும், நவம்பரில் பரீட்சையை நடத்துவது மாணவர்களுக்கு அநீதியாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# தேசிய ஒளடதங்கள் அதிகாரசபையின்

## தரவுத்தளத்திலிருந்த தரவுகளைக் காணவில்லை

(கொழும்பு)

தேசிய ஒளடத கட்டுப்பாட்டு அதிகார சபையின், தானியங்கி தரவுத்தளம் பத்து இலட்சம் தரவுகளுடன் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒளடத கட்டுப்பாட்டு அதிகார சபையின்கீழ் இருந்த குறித்த தரவுத்தளம், சில நாட்களுக்கு முன்னர் அழிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஒளடதங்கள் தொடர்பான பிரதிநிதி நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அதில் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தரவுத்தளம் காணாமல்போனமை குறித்து, அந்தத் தரவுத்தளத்தை இயக்கிய தனியார் நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேசிய ஒளடத கட்டுப்பாட்டு அதிகார சபைத் தலைவரான வைத்தியர் ரசித்த விஜேவன்தவின் ஆலோசனையின்பேரில், குறித்த விடயம் தொடர்பில் வழக்கு தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இரண்டரை கோடி ரூபாய் பணத்தை மக்களுக்கு பகிர்ந்தளித்த வர்த்தகர்

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்றை அடுத்து தற்போது நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது நாளாந்த வாழ்வுக்கு மக்கள் அவதியுறுவதும் தகவல்களாக வெளிவந்துள்ளன.

அவ்வாறு அவதியுறும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் வர்த்தகர் ஒருவர் உதவி புரிந்துள்ளார்.

இதன்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் தனது இரண்டரை கோடி ரூபாய் பணத்தை குறித்த வர்த்தகர் பகிர்ந்தளித்த சம்பவமொன்று களனி பகுதியில் பதிவாகியுள்ளது.

களனி பகுதியைச் சேர்ந்த C.மஞ்சுள பெரேரா என்ற வர்த்தகரே, இவ்வாறு பணத்தை மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். ஹுனுப்பிட்டி - நாஹேன பகுதி மக்களுக்கு தலா 1000 ரூபா விகிதம், இந்த இரண்டரை கோடி ரூபா பணத்தையும் பகிர்ந்தளித்துள்ளார். (நி-5)

# விலை அதிகரிப்பு தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை

## முல்லை.மாவட்ட செயலர் தெரிவிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அவை தொடர்பான முறைப்பாடுகள் தனக்கு கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. அரசு உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையினை இதுவரை அறிவிக்கவில்லை. அறிவிக்கப்பட்டால் அதிகரித்த விலை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க முடியும். அத்துடன் தற்போது முடக்க நிலையினால் பாதிப்புற்ற நிலையினை எதிர்கொண்டுள்ள குடும்பங்களுக்கான ரூபா.2,000 வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவத்தினரால் வீடு வீடாகச் சென்று 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கான கொவிட் 19 தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்து கொவிட் 19 இல் இருந்து தங்களை தற்பாதுகாத்துக் கொள்ளுமாறும் மாவட்டச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-350)

# வர்த்தகர்கள் மீது வழக்குப் பதிவு

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் உரிய அனுமதி இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் மீது நேற்றைய தினம் மன்னார் பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகர் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வந்த நிலையில் உரிய அனுமதிப்பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (7-4-6-285)

# பரீட்சார்த்த தக்காளி செய்கையில் வெற்றி



(முறிகண்டி)

வட மாகாணத்தில் தக்காளி செய்கையும் பிரதான விவசாய உற்பத்தியாக இடம் பிடித்துள்ளது. இந்த நிலையில் வறட்சி காலத்தில் தக்காளி செய்கையில் பாரிய அளவு வருமானம் கிடைப்பதில்லை எனவும், போதுமான விளைச்சல் கிடைப்பதில்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், ஜே கே வி 2 எனும் இனத்தை ஒரு விவசாய நிறுவனத்தின் உதவியுடன் பரீட்சார்த்தமாக மேற்கொண்டார். கிளிநொச்சி செல்வாநகர் பகுதியை சேர்ந்த விவசாயியான மயில்வாகனம் ராயகோபால் எனும் விவசாயி. குறித்த விவசாய நிறுவனத்தினால் மாதிரி செய்கைக்காக வழங்கப்பட்ட ஜே கே வி 2 எனும் தக்காளி இனமானது, வழமை போன்று விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் தக்காளி செய்கையில் கிடைக்கும் விளைச்சலுக்கு மேலதிகமான விளைச்சலை பெற்றுக்கொடுத்துள்ளது என தெரிவித்துள்ளார். (7-4-6-100)

# பொருட்களின் விலை உயர்வால் மூன்று மாவட்டங்களிலும் மக்கள் அவதி

(நெளுக்குளம்)

பொருட்களின் விலை உயர்வால் மூன்று மாவட்டங்களிலும் மக்கள் அவதிப்படுவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. அத்தியாவசியப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் அல்லது கட்டுப்பாட்டு விலையில் எந்தப் பொருட்களையும் பெற முடியாத சூழ்நிலை என் தேர்தல் மாவட்டங்களான மன்னார், வவு னியா மற்றும் முல்லைத்தீவில் உள்ளது.

ஏழைகளின் உணவுப் பொருட்களாகக் கருதப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் விற்கப்படுகின்றன. இந்த விவகாரத்தை ஆராய எந்த அரச அதிகாரிகளும் முன் வருவதாக தெரியவில்லை. பொருட்களின் விலை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தும் கூட நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மாறாக கூடிய விலையில் பொருட்கள் யாவும் விற்கப்படுகின்றன. அரசு விதித்த கட்டுப்பாட்டு நிர்ணய விலை பொருந்தாததாக இங்கு காணப்படுகிறது. இதற்கு காரணம் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கு என்றே கூறவேண்டும்.

எனவே இவ் விடயத்தினை கவனத்தில் இருத்தி இந்த மக்களின் அவதி நிலையினை போக்க உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (7-4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினோபார்ம் தடுப்பூசி செலுத்தினாலும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி வெளிநாடுகளுக்கு செல்ல முடியும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் சீனத் தயாரிப்பான சினோபாம் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் வெளிநாடு செல்ல முடியாத நிலைமை எதுவும் ஏற்படவில்லை எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

சினோபார்ம் தடுப்பூசிக்கு அனுமதி வழங்காத நாடாக இருந்ததாக இருந்தாலும் குறித்த நாடு வழங்கியுள்ள செயற்பாடுகளை பின்பற்றி அந்த நாட்டிற்குள் நுழைய முடியும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் விசேட மருத்துவர் ரஞ்ஜித் பட்டுவத்துடாவ தெரிவித்துள்ளார்.


வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கைக்கமைய 140 நாடுகள் வெளியிட்டுள்ள கொவிட் வழிகாட்டல்களை பின்பற்றி வெளிநாடுகளுக்கு செல்ல முடியும். அதற்கமைய அங்கு சென்று தனிமைப்படுத்திக் கொள்ள முடியும்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் கட்டாய தடுப்பூசி நடவடிக்கைகளை அறிவிக்கவில்லை. அந்த நாடுகளுக்கு சென்று 10 நாட்கள் தனிமைப்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அந்த நாட்டு தடுப்பூசிகள் இங்கிருந்து செல்பவர்களுக்கு வழங்கப்படலாம்.

சினோபார்ம் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாதென்ற நிலைமை இல்லை.

சுவீடன், ஹங்கேரியா, கனடா, நெதர்லாந்து, ஈராக், ஜோர்தான் மாலைதீவு, வடகொரியா, கட்டார், பாகிஸ்தான், இந்தோனேஷியா உட்பட நாடுகள் பல சினோபார்ம் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியுள்ளதென சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் விசேட வைத்தியர் ரஞ்ஜித் பட்டுவத்துடாவ மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# மூன்றாவது தடுப்பூசியை செலுத்துவதில் சிக்கல் ஏற்படலாம் - பொன்சேகா



(கொழும்பு)

இலங்கையின் தடுப்பூசி திட்டம் தாமதமாகத் தொடங்கப்பட்டதால் மூன்றாவது தடுப்பூசியை செலுத்துவதில் சிக்கல் ஏற்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், இருப்பினும் இலங்கை அரசாங்கம் தற்போது சிறந்த முறையில் அத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாக பாராட்டு தெரிவித்தார்.

மேலும் எவ்வித உதவிகளும் இன்றி அமெரிக்கா மற்றும் இத்தாலி போன்ற சில நாடுகளினால் தொற்றைக் கட்டுப்படுத்த முடிந்தது என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அமெரிக்கா மற்றும் இத்தாலியுடன் ஒப்பிடுகையில் மக்கள் தொகை குறைவாக கொண்ட இலங்கையில் இந்த திட்டம் விரைவுபடுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

தாமதமான தடுப்பூசித் திட்டம் கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு தடையாக இருக்கலாம். ஆகவே மூன்றாவது தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னர் பல நோயாளிகள் மற்றும் இறப்புகள் பதிவாகலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# 5 நாட்களில் 280 தொன் ஒட்சிசன் இந்தியாவிலிருந்து இலங்கை வந்தது

(கொழும்பு)

இந்தியாவின் - ஹால்டியா துறைமுகத்தில் இருந்து மேலும் 100 தொன்கள் ஒட்சிசன் கப்பல் மூலம் நேற்று முன்தினம் இலங்கை எடுத்துவரப்பட்டது.

இவற்றுடன் கடந்த ஒரு வார காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 280 தொன்கள் ஒட்சிசன் வந்தடைந்துள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அடுத்துவரும் நாட்கள் வாரங்களில் இன்னும் பல தொகுதி ஒட்சிசன் இலங்கை வந்தடையுமென எதிர் பார்க்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்று நோய் மிக ஆபத்தான கட்டத்தில் உள்ளது. தினசரி 4 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்படுவதுடன், 200 வரையான மரணங்கள் பதிவாகின்றன. நாட்டில் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்படுவோரில் அதிகளவானவர்கள் ஒட்சிசனை சார்ந்திருக்க வேண்டி ஏற்படுகிறது.

இந்நிலையில் அதிகரிக்கும் ஒட்சிசன் தேவையை நிறைவு செய்ய வாராந்தம் 3 இலட்சம் லீற்றர் திரவ மருத்துவ ஒட்சிசனை இறக்குமதி செய்ய கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை [illegible] (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பங்கிடும் பண்பு

ஒரு வயதான ஆள். நிலத்திலே ஏர் உழுதுகொண்டிருந்தார். கிழிந்து போன ஒரு சின்ன துண்டை தான் இடுப்பிலே கட்டியிருந்தார். தலையிலே ஒரு கந்தலை சுத்தியிருந்தார். உடம்பு முழுவதும் சேறு! ரொம்ப ஏழை போலிருக்கு!

ஏர் ஓட்டிக்கொண்டிருந்தவர் வேறு எப்படி இருப்பார். இருந்தாலும் அந்த ஆளு ரொம்ப ஜாலியா பாட்டுப் பாடிக் கொண்டே ஏர் உழுது கொண்டிருந்தார். உடம்பிலே தான் அவர் ஏழையே தவிர மனதிலே அவர் ஏழையாகத் தெரியவில்லை.

அந்த சமயத்திலே அந்த நாட்டு ராஜா அந்த பக்கமாக குதிரை மேலே வந்தார். வேட்டைக்குப் போய்விட்டுப் பரிவாரங்களுடன் திரும்பி வந்துகொண்டிருந்தார். ரொம்பச் செல்வச் செழிப்பிலே இருக்கின்ற ராஜா அவர்.

அவர் இந்த வயதான விவசாயியைப் பார்த்தார். இந்த ஆளு ரொம்பவும் ஏழை என்கிறது அவரைப் பார்த்தாலே பளிச் என்று தெரிகிறது! கட்டிக்கொள்கிறதற்கு நல்ல துணியில்லை! உடம்போ இளைச்சுப் போய்விட்டது! வயிறு முதுகிலே போய் ஒட்டிக்கொண்டுள்ளது. கண்ணு குழிவிழுந்து போயுள்ளது! ஆனாலும் முகத்தைப் பார்த்தால் சந்தோஷமாக இருக்கிற மாதிரி இருக்கு. இவ்வளவு உற்சாகமாக பாடிக்கொண்டிருக்கிறாரே! அப்படி என்று ஆச்சரியமாக நினைத்துப் பார்த்தார் அந்த ராஜா!

சரி அவரிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார். "ஐயா பெரியவரே! கொஞ்சம் இப்படி வரமுடியுமா?" என்றார். "பொழுது போறதுக்குள்ளே இந்த வயல் முழுவதும் உழவு ஓட்டியாக வேண்டும். அதனால் பேசுவதற்கு நேரமில்லை என்றார். என்ன அவ்வளவு அவசரமா. மீதியிருந்தா நாளைக்கு உழக் கூடாதா. அது சரி உனக்கு எத்தனை ஏக்கர் நிலமிருக்கு என்று விசாரித்தார் ராஜா.

எனக்குச் சொந்தமாக உள்ளங்கை அளவு நிலம் கூட இல்லை! இது எங்க எஜமானுடைய நிலம். இதை முழுவதும் உழுது முடித்தால்தான் அவர் கூலி கொடுப்பார். நான் கூலிக்கு உழுதுகொண்டிருக்கின்றேன். உங்களிடம் பேசிக் கொண்டிருந்தால் அவருக்கு துரோகம் செய்வது மாதிரி ஆகும்" என்றார்.

ராஜா குதிரையை விட்டு இறங்கி வரப்பிலே நடந்து கொண்டிருந்த அந்த பெரியவரிடம் பேச ஆரம்பித்தார். "ஒரு நாள் முழுவதும் உனக்கு எவ்வளவு கூலி?" என்று கேட்டார். "எட்டணா கூலி கிடைக்கும்!" என்றார் அவர். "இவ்வளவுதானா? இதை வைத்துக் கொண்டு நீ எப்படி காலம் தள்ளுகிறாய்?" என்றார். "ஒன்றும் கவலை இல்லை" என்றார் அவர். ராஜாவுக்கு ரொம்ப ஆச்சரியமாக போய் விட்டது.

எட்டணா கூலி வாங்குகிற இவர் கவலை இல்லாமல் இருக்கிறார். ஏராளமான வசதியோட இருக்கின்ற நான் கவலை இல்லாமல் வாழ முடியவில்லை! என்று நினைத்தார். "அது சரி எட்டணாவிலே எப்படி குடும்பம் நடத்துவது" என்று கேட்டார்.

"எனக்கு கிடைக்கின்ற எட்டணாவிலே இரண்டு அணா குடும்பத்திற்கு செலவழிக்கின்றேன். இரண்டு அணா பழைய கடனுக்குத் தருகிறேன். இரண்டு அணா தருமம் செய்கின்றேன். இரண்டு அணா வட்டிக்கு கொடுக்கின்றேன். ஒரு குறையும் இல்லை" என்றார்.

"ஒன்றும் புரியவில்லையே" என்றார் ராஜா! "ஐயா எனக்கும் என் மனைவிக்கும் இரண்டு அணா செலவாகின்றது. வயதான அம்மா அப்பா இருக்கிறார்கள். சின்ன வயசிலே என்னை காப்பாத்தினார்கள் அவர்கள். அந்த கடனுக்கு இரண்டு அணா செலவாகின்றது. அது பழைய கடன்.

என் தங்கச்சி ஒருத்தி ஆதரவல்லாத நிலையிலே தன் மகனோட என் வீட்டிலே இருக்கின்றாள். அவளுக்கும் அவள் மகனுக்கும் இரண்டு அணா செலவு செய்கின்றேன். அது தருமம்.

எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்களுக்கு இரண்டு அணா செலவு செய்கின்றேன்! அது வட்டிக்கு குடுக்கின்றது மாதிரி பிற்காலத்திலே அவர்கள் என்னை காப்பாற்றுவார்கள். அந்த வகையிலே நான் திருப்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்-" என்றார்.

ராஜாவுக்கு அர்த்தம் புரிய ஆரம்பித்தது! அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்கி அந்த பெரியவருக்கு தானமாக கொடுத்துவிட்டார். உழுதவருக்கே நிலம் சொந்தமாகிவிட்டது! அன்றையில் இருந்து அரசனுக்கும் ஆறுதல் கிடைத்தது.

எட்டணா வருமானத்தை வைத்துக்கொண்டு எப்படி காலந்தள்ளுவது என்று சொல்வதற்காக இந்தக் கதையை சொல்வதாக யாரும் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. கிடைக்கிறதை எப்படி பங்கு போடுகிறார். எப்படி திருப்தியாக வாழுகிறார் என்பதை கவனிக்க வேண்டும்.

ஒரு ஆள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருந்தான். உங்கள் நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் என்ன காரணம் என்று கேட்டார் இன்னொருத்தர். "என்னிடம் இருந்தது முழுவதையும் என் பிள்ளைகளுக்குச் சமமாக பங்கு போட்டுக் கொடுத்துவிட்டேன். எனக்கு என்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை அதுதான் நிம்மதிக்குக் காரணம்" என்றான்.

"உன்னிடம் எவ்வளவு இருந்தது?" என்று கேட்டார். "மொத்தமாக ஒரு 50 ஆயிரம் ரூபா இருக்கும்" என்றான். "அவ்வளவும் பணமாகவே இருந்ததா?" என்றான். "இல்லை அவ்வளவு கடன் அதைத்தான் பிரித்துக் கொடுத்தேன்" என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கிழவர் கேட்ட கேள்வி

பாணபத்திரரின் குடும்பத்திற்கு தன் தந்தையார்காலத்தில்கொடுக்கப்பட்ட மரியாதையை மன்னன் அறிவான்.

எனவே, அக்குடும்பத்திற்கு எதிராக செயற்பட பயந்தான். இருப்பினும்தன் மனைவியை திருப்திபடுத்த வேண்டும் என்பதற்காக பாணபத்திரரின் மனைவியை பழிவாங்க நினைத்தான்:

அச்சமயத்தில் ஈழ நாட்டு பெண் ஒருத்தி இசைக்கலையில்பெரும் புகழ் பெற்றிருந்தாள்.

எனவே, அவளை அழைத்து வந்து நாட்டில் இசைக்கச்சேரி வைத்தான். கச்சேரி முடிவில், "என்னுடன் போட்டியிட யார் தயார்?" என்றாள்.

அப்படி கேட்க வைத்ததும் மன்னர் தான். உடனே மன்னன் பாணபத்திரரின் மனைவியைப் பார்த்து, "அம்மையீர்! நீங்கள் தான் நம் நாட்டின் பெருமையை நிலைநாட்ட முடியும்!"என்றான்.

"பணம், புகழுக்காக இல்லை. நாட்டின்பெருமைக்காக கலந்து கொள்கிறேன்!" என்றார். உடனே போட்டி யின் திட்டங்களை மன்னன் அறிவித்தான்.

"மூன்று நாட்கள் போட்டி நடைபெறும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. ஈழநங்கை வெற்றி பெற்றால் அரசவைக் கலைஞராக் கப்படுவார். பாணபத்திரரின் மனைவி தோற்றால் நாடு கடத்தப்படுவார்..." என்றான்.

முதல் நாள் போட்டி தொடங்கியது. ஈழ மங்கையின் இசை அவ்வளவு சிறப்பாக இல்லை என்றாலும் அரசரின் கட்டளைப்படி அவளே சிறந்த இசை வழங்கியதாக அறிவிக் கப் பட்டது. இரண்டாவது நாளும் தீர்ப்பு இப்படியே வழங்கப்பட்டது.



பாணபத்திரரின் மனைவி, மன்னன் தனக்கெதிராக போட்டுள்ள சதித்திட்டம் என்பதை புரிந்து கொண்டு இறைவனிடம் கூறி அழுதாள்.

"இறைவா நீ தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!" என்று முறையிட்டாள். மூன்றாவது நாள் போட்டி தொடங்கியது. திட்டமிட்டபடியே ஈழத்து மங்கை தான் சிறப்பாக இசைத்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டது.அப்போது மக்கள் கூட்டத்தில் இருந்து முதியவர் ஒருவர் எழுந்து நின்றார்.

(தொடரும்)

# மகாபாரதம்




பீஷ்மர் கூறத் தொடங்கினார்.

"ஆதி காலத்தில் கிருத யுகத்தில் மக்கள் யாவரும் தரும நெறியைப் பின் பற்றி வாழ்ந்தனர்.

ஒழுக்கம் தவறாத அக்காலத்தில் மன்னனும் இல்லை, தண்டனையும் இல்லை. காலம் செல்லச் செல்லத் தரும நெறி குன்றியது.

அறிவின் குறைவால் ஆசைவயப்பட்ட மனிதர் தம்மிடம் இல்லாது பிறரிடம் உள்ள பொருளைப் பெற விரும்பினர்.அதனால் திருட்டு, கொலை, சூது,சினம் முதலிய கெட்ட குணங்கள் தலைவிரித்து ஆடத் தொடங்கின.

எதைச் செய்வது, எதைச்செய்யக்கூடாது என வரைமுறை இன்றிப் போயிற்று. காமம் மிகுந்தது. மாதரின் ஒழுக்க நெறியும் குறைந்தது.

வேத நெறி பாழ்பட்டது. தரும நெறி சிதைந்தது.இது கண்டு தேவர்கள் கவலையுற்றனர்.

பிரம்ம தேவனிடம் சென்று "பகவானே... அருள் புரியுங்கள். உலகில் தருமம் கெட்டது. அதர்மம் சூழ்ந்துள்ளது. நெறி கெட்ட உலகை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்" என முறையிட்டனர்.

"பிரம தேவர் ஒரு இலட்சம் அத்தியாயங்கள் கொண்ட நீதி சாத்திரத்தை இயற்றினார். அதில் அவர் விரிவாக அறம், பொருள், இன்பம் மூன்றையும் விளக்கினார். இம் மூன்றைக் காட்டிலும் மோட்சம் என்பது வேறானது என்றும் அதில் கூறப் பட்டுள்ளது.

மேலும் அதில் சத்துவம், ராஜசம், தாமதம் ஆகியவை பற்றியும் தேசம், காலம், முயற்சியின் பயன், ஞானம், கருமம்,மந்திர ஆலோசனை, அரசன், அமைச்சன், தூதன், ஒற்றன் ஆகியோர் இயல்பு பற்றியும் சந்தி விக்கிரகம், வெற்றிக் குரிய வழிகள், நால் வகை படையின் இயல்புகள்,பெற முடியாத பொருளைப் பெறும் உபாயம்,பெற்றதைக் காக்கும் முறை, குற்றங்களுக்கு ஏற்ப தண்டனை ஆகியவை பற்றியும் விரிவாக இந்தத் தண்டனை நூலில் விளக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமங்களுடன் பாடுபட்டு அவற்றை வெல்வது மனித நலன்களில் மிகச் சிறந்தது.

*– சாமுவேல் ஜான்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாவலர் கலாசார மண்டப விவகாரம் பொது நிலைத் தீர்வு அவசியம்

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்க முடியாது. அவ்வாறு ஒப்படைத்தால் அது பெரும் ஆபத்தாக அமையும் என யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை மீளவும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்து கலாசார திணைக்களம் யாழ்.மாநகர சபையிடம் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில், மேற்படியான அறிவிப்பை யாழ்.மாநகர முதல்வர் விடுத்துள்ளார்.

அதிலும் நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசார திணைக்களத்திடம் மீளவும் ஒப்படைக்க வேண்டும் என சைவ சமயத் தலைவர்களும் பேராசிரியர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்த நிலையில், அதனை அடியோடு நிராகரிப்பதாக யாழ்.மாநகர முதல்வர் விடுத்துள்ள பதில் அமைகிறது.

உண்மையில் நாவலர் கலாசார மண்டபம் குறித்து; யாழ்ப்பாணம் மாநகர சபை, இந்து கலாசாரத் திணைக்களம் மற்றும் சைவ சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து ஆராய வேண்டும்.

இதில் நாவலர் கலாசார மண்டபத்தின் ஆதனம் யாருக்கு உரியது என்பதில் இருக்கக்கூடிய ஆவணங்கள் ஆராயப்படுவது அவசியம்.

பொதுவில் நாவலர் கலாசார மண்டப ஆதனம் இந்து கலாசாரத் திணைக்களத்துக்கு உரியது எனவும் இந்து கலாசார திணைக்களமே யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் மண்டபத்தை கவனிக்குமாறு ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

எனவே நாவலர் கலாசார மண்டபத்தின் ஆதனம், கட்டடத்தை நிர்மாணித்தது யார்? என்ற கேள்விகளுக்கு பதில் காணப்பட வேண்டும்.

தவிர, நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசாரத் திணைக்களத்திடம் ஒப்படைப்பது எந்தவகையில் ஆபத்தானது என்பது பற்றியும் ஆராய்வது பொருத்துடையது.

எதுவாயினும் நாவலர் கலாசார மண்டபத்தை யாழ்.மாநகர சபை, இந்து கலாசாரத் திணைக்களத்திடம் ஒப்புடைக்க வேண்டும் என சமயத் தலைவர்களும் பேராசிரியர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்ததற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்தால்,

நாவல்ர் கலாசார மண்டபத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை கந்தறுத்துவிட்டது என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

நாய்க்கு ஊசி போடவும், மாமிச உணவுகளை வைத்து உண்பதுமான அபச்சாரக் கொடுமைகள் அங்கு நடந்துள்ளன.

இதுவிடயத்தில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் வி.மணிவண்ணனுக்குத் தொடர்பில்லையாயினும் ஏற்கெனவே நடந்தவற்றை மறந்துவிட முடியாது என்பதை முதல்வர் ஏற்றுக் கொள்வார் என நம்புகின்றோம்.

இவையாவற்றுக்கும் மேலாக, நாவலர் கலாசார மண்டபத்தை பராமரிப்பதற்கு இதுவரையில் யாழ்.மாநகர சபை எவ்வளவு நிதியை ஒதுக்கியது என்ற தகவல்களும் ஆராயப்பட வேண்டும்.

ஆக, சைவத்தினதும் தமிழ் மொழியினதும் காவலனாக விளங்கிய நாவலர் பெருமான் வாழ்ந்த இடத்தில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தை யார் நிர்வகிப்பது நல்லது என்பதுபற்றி ஒரு பொதுநிலைத் தீர்மானம் எடுக்க வேண்டும்.

தவிர, இதில் யாழ்.மாநகர சபை தனித்துத் தீர்மானம் எடுக்க முடியாது என்பதுதான் உண்மை.

# கொரோனாவிலிருந்து நாட்டை காப்பாற்ற மக்களின் ஆதரவு மிகவும் அவசியம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து நாட்டை காப்பாற்றிக் கொள்வதற்காக இந்த சந்தர்ப்பத்தில் மக்களின் ஆதரவு மிகவும் அவசியம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று அலரி மாளிகையில் ஊடக நிறுவனம் ஒன்றுடன் இடம்பெற்ற சந்திப்பில் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக நாட்டை முடக்கி வைப்பதில் எந்த பயனும் இல்லை.அதற்கமைய, நாட்டைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார பாதுகாப்பு உட்பட கோவிட் தடுப்பு நடவடிக்கையில்இணைந்துள்ள பிரதான. தரவு குழுவினர் தங்கள் உயிரை இரண்டாம் பட்சமாக வைத்து செயற்படுகின்றனர்.

அவ்வாறான சூழலில் மக்கள் நாட்டிற்காக தங்கள் ஆதரவுகளை வெளிப்படுத்துவற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பம் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### வவு.புதிய அரச அதிபராக

## பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் நியமனம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட புதிய அரச அதிபராக பௌத்தசாசன அமைச்சில் உயர் அதிகாரியாக பணியாற்றிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா அரச அதிபராகக் கடமையாற்றிய சமன் பந்துலசேன வட மாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றிருந்தார்.

இதனையடுத்து கடந்த ஒரு மாத காலமாக மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய தி.திரேஸ்குமார் பதில் அரச அதிபராக தனது பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் பௌத்தசாசன அமைச்சில் முக்கிய பதவியினை வகித்த சரத் சந்திர வவுனியா மாவட்டத்திற்கான புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் தனது பதவியினை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ம-3,299)

### சித்தங்கேணி கொலை வழக்கு;

## சந்தேகநபர்களுக்கு 6ஆம் திகதிவரை மறியல்

(யாழ்ப்பாணம்)

அயல்வீட்டாருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு அடிதடியில் முடிந்ததால் உயிரிழந்த சித்தங்கேணி நபர் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று மல்லாகம் நீதிம்ன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்களை எதிர்வரும் ஆறாம் திகதி வரை 'விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மூன்று மாதகாலமாக நீடித்த காணிப் பிணக்கு அடிதடியில் முடிந்ததில் கடந்த 25 ஆம் திகதி சித்தங்கேணியைச் சேர்ந்த இராசநாயகம் ரெஜியானந்தன் (வயது- 49) என்பவர் உயிரிழந்திருந்தார்.

அதன் தொடராக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-3)

## சாவ.சங்கத்தானையில் மூதாட்டி திடீர் மரணம்

### சடலம் பிசிஆர் இற்காக ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

திடீர் சுகவீனம் ஏற்பட்டு வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட 74வயதுப் பெண் ஒருவர் வழியில் உயிரிழந்த சம்பவம் நேற்று மதியம் சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றுள்ளது.

மூதாட்டியின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,30)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மனத்தை தன்வயப்படுத்தும் காரணங்கள் ஐந்து

மனத்தை தன்வயப்படுத்தும் காரணங்கள் ஐந்து. அவை இடம், நேரம், உணவு, கடந்த கால எண்ணப் பதிவுகள் மற்றும் சேர்க்கைகளும் செயல்களும் ஆகும்.

நீங்கள் இருக்கும் ஒவ்வொரு இடமும் மனத்தின் மீது வெவ்வேறான, தாக்குதல் விளைவை உடையது. உங்கள் வீட்டிற்குள்ளேயே வெவ்வேறு அறைகளில் வெவ்வேறு விதமாக நீங்கள் உணர்வீர்கள். பாடுதல், பண்ணிசைத்தல் மற்றும் தியானம் ஆகியவை நிகழ்ந்த இடம் மனத்தின் மீது வேறான விளைவை ஏற்படுத்தும். ஒரு குறிப்பிட்ட இடத்தை நீங்கள் இப்போது விரும்பலாம். ஆனால் சற்று நேரங்கழித்து அது அப்படியே இருக்காது.

நேரங்கூட ஒரு காரணம். ஓர் ஆண்டின் வெவ்வேறு காலங்கள், ஒரு நாளின் வெவ்வேறு நேரங்கள் மனதின் மேல் வெவ்வேறு விளைவாட்சியை உடையது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கடவுள் என்ற சொல்லின் பொருள் என்ன? கடவுகின்றவன் கடவுள். கடவுதல், செலுத்துதல். உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரைக் கடவுள் செலுத்துகிறான். காரை சாரதி செலுத்துகிறார், இறைவன் உயிருக்கு உயிராய் உள் நின்று நம்மைச் செலுத்துகின்றான். உடம்புக்குள்ளே கடவுள்.

டயருக்குள் டியூப். டியூப்புக்குள் காற்று. டயர் போல் உடம்பும், டியூப் போல் உயிரும், காற்று போல் கடவுளும் என உணர்க. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் [illegible] களுக்காக நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி [illegible]

[illegible] பிரதேசத்தில் அன்னை கடல்உணவு நாவாந்துறை, நாவலர் வீதி, காரைநகர் வீதி சந்தி, ஆறுகால்மடம், சுகந்த் இன்டர்நஷனல் காக்கைதீவு ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புன்னை நீராவி தொலைத் தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம், சாய் சிறுவர் இல்லம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், குழுமாட்டுச் சந்தி, மறக்காறம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**18**

**கலாநிதி க.தவலிங்கம்,**
**ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்**



### தென்மாகாண சபை இடைத் தேர்தலுக்கான பின்னணி

தென்மாகாண சபையின் வரவு-செலவுத்திட்ட விவாதம் 1993 டிசெம்பர் 13, 14 திகதிகளில் நடைபெற இருந்தது. இந்நிலையில் PA அங்கத்தவர் விமலசேன தொன் பிரான்ஸ்ஸிஸ்கூ கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக இவரின் மனைவி நந்தா குணரத்ன பிரான்ஸிக்கூவினாலும், முதலமைச்சரினாலும் காலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஒரு மேலதிக வாக்கினையே நம்பியிருந்த முதலமைச்சருக்கு பிரான்ஸ்ஸிஸ்கூ சம்பவம் பெரும் தலையிடியையே தந்தது.

இதனால் 13, 14 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவிருந்த வரவு- செலவுத்திட்ட விவாதம் டிசெம்பர் 23 ஆம் திகதிக்கும். பிறகு டிசெம்பர் 30 ஆம் திகதிக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் பிரான்ஸிஸ்கூ தான் கடத்திச் செல்லப்படவில்லை எனவும் இருதய சிகிச்சை பெற கொழும்பில் தனியார் மருத்துவ நிலையமொன்றில் தங்கியிருந்ததாகவும் 1993-12-16 ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

ஆனால் இவரின் ஆதரவு தொடர்ந்தும் PA க்குக் கிடைக்கவில்லை.

இந்நிலையில் UNP உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றினை முன்வைத்தனர். இதேநேரத்தில் 1993-12-21 இல் ஆளுநர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் இராஜினாமாச் செய்ததுடன் லெஸ்லி மர்வின் ஜயரத்தின புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

தென்மாகாணசபையில் ஆளும் கட்சியினர் எதிர்நோக்கிய பிரச்சினை நிலையினால் 1993-12-30 ஆம் திகதி நள்ளிரவுடன் தென்மாகாண சபை கலைக்கப்பட்டது.

இவ்வாறாக தென்மாகாண சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்மாகாண சபை இடைக்கால தேர்தலுக்கான அறிவித்தல் 1994.01.04 ஆம் திகதி விடுக்கப்பட்டது. நியமனப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினமாக 1994.01.25 ஆம் திகதி வரையறுக்கப்பட்டது.

### தென்மாகாண சபை இடைத் தேர்தல்

1977 ஆம் ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் எதிர்க்கட்சியினருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமைந்தது 1994 ஆம் ஆண்டு தென்மாகாணசபைத்தேர்தலாகும்.

இந்தத் தேர்தலில் காலி மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி (PA), ஜனநாயக ஐக்கிய முன்னணி (DUNF), ஐக்கிய தேசியக்கட்சி (UNP) , நவசமசமாஜ கட்சி (NLSSP), சிங்கள மஹ சம்மத பூமிபுத்ர ஆகிய கட்சிகளும், மாத்தறை மாவட்டத்தில் PA, UNP, NLSSP ஆகிய கட்சிகளும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் PA, UNP, NLSSP மற்றும் ஒரு சுயேட்சைக் குழு ஆகியனவும் தேர்தல் களத்தில் குதித்தன. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 1994. 03.21 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தன. 1994.03.24 இல் நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் அட்டவணை-5 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

- 54.57% வாக்குகளை யும் UNP - 43.80% வாக்குகளையும் பெற்றிருந்தது.)

1977 பொதுத் தேர்தல் தோல்வியின் பின் இலங்கையில் நடைபெற்ற தேர்தலின் போது S.L.F.P. முதற் தடவையாக 50வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற சந்தர்ப்பம் இதுவாகும்.

**1977 பொதுத்தேர்தல் தோல்வியின் பின் இலங்கையில் நடைபெற்ற தேர்த லின் போது S.L.F.P. முதற் தடவையாக 50வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற சந்தர்ப்பம் 1993 தென்மாகாண சபை தேர்தலாகும்.**

### 1996இல் பதவிக் காலம் முடியும் முன் வடமத்திய மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை கலைப்புகள் சம்பந்தமான வழக்குகள்

பதவிக் காலம் (5 வருடங்கள்) முடியும் முன் இரு மாகாண சபைகளைக் கலைக்கும் பொருட்டு வடமத்திய மாகாண சபை ஆளுநர் வடமத்திய மாகாண சபையைக் கலைப்பதற்கும் சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் சப்ரகமுவ மாகாண சபையைக் கலைப்பதற்கும் அம் மாகாணங்களின் முதலமைச்சர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் 1996-01-03 திகதியிடப்பட்ட 904/7 இலக்க விஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டார்கள். இவ்வாறு இவ்விரு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டது அரசியல் அமைப்பின் உறுப்புரைகள் 154B (8) (c) மற்றும் 154B (8) (d) படி முரணானது என்றும் அவ் வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகாதது என்று அறிவிக்கும் படியும் G.D. மகிந்தசோமா உட்பட சிலர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார்கள். உறுப்புரைகள் 154B (8) (c) மற்றும் 154B (8) (d) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், மாகாண சபையைக் கூட்டுமாறு அழைப்பதற்கும் மாகாண சபையின் அமர்வை நிறுத்துவதற்கும், மாகாண சபையைக் கலைப்பதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. ஆளுநர் இச்செய்கைகளை முதலமைச்சரின் அபிப்பிராயப்படியும் அமைச்சர்கள் சபை மாகாண சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றும் செய்யவேண்டும்.

**அட்டவணை 5**
**தென் மாகாண சபைத் தேர்தல் 1994**

| மாவட்டம் | கட்சிகள் | | |
|---|---|---|---|
| | UNP | PA | மொத்தம் |
| காலி | 10 | 12 | 22 |
| மாத்தறை | 7 | 10 | 17 |
| அம்பாந்தோட்டை | 6 | 8 | 14 |
| Bonus | | 2 | 2 |
| மொத்தம் | 23 | 32 | 55 |

1993 தென் மாகாண சபை தேர்தல் முடிவுகளுடன் 1994 தேர்தல் முடிவுகளை ஒப்பிடும் போது பொதுசன ஐக்கிய முன்னணியின் (PA) அமோக வெற்றியினை அவதானிக்க முடிகின்றது. 1994 ஆம் ஆண்டுத் தேர்தல் தொகுதி ரீதியாக தேர்தல் முடிவுகளை எடுத்து நோக்குமிடத்து பலபிட்டிய தேர்தல் தொகுதியில் மாத்திரமே UNP 50 வீதத்திற்கு அதிகமான (51.24%) வாக்குகளை பெற்றிருந்தது. ஆனால் காலி மாவட்டத்தில் 8 தொகுதிகளிலும் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 10 தொகுதிகளிலும் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் PA பெற்றிருந்தது. (மாகாண ரீதியில் PA

முதலமைச்சருக்கு பெரும்பான்மை இருக்கின்றபோது அவரது சம்மதமின்றி மாகாண சபையைக் கலைக்க முடியாது. உறுப்புரைகள் 154B (8) (c) மற்றும் 154B (8) (d) இன்படி ஆளுநர்கள் நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றம் G.D.மகிந்தசோமா உட்பட சிலரின் கருத்தை ஏற்று மாகாண சபைகளைக் கலைத்தது சட்டத்திற்கு முரணானது என்றும் அவ் வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகாதது என்றும் தீர்ப்பு வழங்கியது.

**பதவிக் காலம் முடியும் முன் வடமத்திய மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளைக் கலைத்தது சட்டத்திற்கு முரணானது என்றும் அவ் வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகாததுஎன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.**

### மூன்றாவது மாகாண சபைத் தேர்தல் -1999

1993 ஆம்ஆண்டில்வட-கிழக்குத் தவிர்ந்த ஏழு மாகாணங்களுக்கு 2 ஆவது தேர்தல்கள் இடம்பெற்றன. ஆறு மாகாணங்களில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. மேற்கு மாகாண சபையை முக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணி (PA) (பல கட்சிகளின் கூட்டணி) கைப்பற்றியது. தெற்கு மாகாணத்தில் ஐ.தே.கவின் சில உறுப்பினர்கள் கட்சி மாறியதை அடுத்து அங்கு 1994 ஆம் ஆண்டில் சிறப்புத் தேர்தல் நடத்தப்பட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணி (PA) வெற்றி பெற்றது. இது பற்றி முன்னர் பார்த்தோம். இவற்றின் பதவிக் காலங்கள் பின்வருமாறு முற்றுப் பெற்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 மாத குழந்தை...

நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதன்போது குழந்தைக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்டது.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளது. (ம-3,299)

## வலி.மேற்கு...

சுகாதாரப் பிரிவு தகவல்கள் கூறுகின்றன.

அத்தியாவசிய தேவை கருதி சுழற்சி முறையில் பணிக்கு அழைக்கப்பட்டு வந்திருந்தனர். அவர்களில் இருவர் நோய் அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்கள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் பணியாற்றிய இன்னொரு ஊழியருக்கும் நோய் அறிகுறி காணப்படுவதால் நேற்று பரிசோதனைக்காக சென்றிருப்பதாக தெரியவருகிறது.

இந்நிலையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பணிமனையை தற்காலிகமாக மூடி அனைத்து ஊழியர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொண்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார். (ம-3)

## 150 கிலோ...

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவிலுள்ள புதுமாத்தளன் பகுதியில் நான்கு உரப்பைகளில் நிலத்தில் புதைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பாரிய அளவிலான கேரள கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று பிற்பகல் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பாரிய பொதிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ புனலாய்வாளர்களின் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் குறித்த பொதிகளை மீட்டுள்ளனர்.

அனவீட்டு பணிகளை தொடர்ந்து மேலதிக நடவடிக்கைக்காக முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த நான்கு உரப்பைகளில் 72 பொதிகள் காணப்படுவதோடு அண்ணளவாக அது 150 கிலோகிராம் நிறை இருக்கும் என தெரியவருகிறது. (ம-3,281)

## நாட்டில்...

நாட்டில், நாளொன்றில் பதிவான கோவிட் மரணங்களின் எண்ணிக்கை முதல் தடவையாக 200ஐ கடந்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த கோவிட் மரணங்கள் தொடர்பான விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பதிவான 209 மரணங்களையடுத்து, நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 8,157ஆக அதிகரித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் பதிவான மொத்த கோவிட் மரண எண்ணிக்கை நேற்று 8,000ஐ கடந்தது.

உயிரிழந்தவர்களில் 108 ஆண்களும், 101 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## +4,597...

பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 412,365 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் 2,139 பேர் கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறினர்.

அதற்கமைய, இதுவரை நாட்டில் கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 351,069 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## காபூல் விமான...

இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பெண்டகன் செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவங்களில் சிறுவர்கள் உட்பட குறைந்தது 13 பேர் பலியாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் 54 பேர் படுகாயம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது வெடிப்பு சம்பவம் கிழக்கு நுழைவாயிலுக்கு அருகிலுள்ள விடுதியொன்றுக்கு வெளியில் இடம்பெற்றிருந்த நிலையில், இரண்டாவது வெடிப்பு சம்பவம் மேற்படி விடுதியை அண்மித்ததாக, விமான நிலையத்தின் அபேய் நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, காபூல் விமான நிலையத்தினை இலக்கு வைத்து தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளதாக அமெரிக்க மற்றும் பிரித்தானிய புலனாய்வு பிரிவினர் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், இந்த வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், வெடிப்பு தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. அமெரிக்க துருப்பினர் ஆப்கானிஸ்தானை விட்டு எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் வெளியேறுவார்கள் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்திருந்தார்.

இதற்கமைய, முதற்கட்ட அமெரிக்க துருப்பினர் அங்கிருந்து வெளியேறியதையடுத்து கடந்த 15ஆம் திகதி தலிபான்கள் ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றியிருந்தனர்.

இதனால் பல்வேறு நாடுகள் தங்களது பிரஜைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டன. இவ்வாறானதொரு சூழலில் தலிபான்களின் ஆட்சியை விரும்பாத ஆப்கானிஸ்தானில் உள்ள மக்களும் அங்கிருந்து வெளியேறுவதற்கு முயற்சித்து வரும் நிலையில், காபூல் விமான நிலையத்தில் நெரிசல் ஏற்பட்டது.

இதனால் தொடர்ந்தும் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய இராணுவத்தினர் காபூல் விமான நிலையத்திற்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இந்தநிலையில், விமான நிலையத்தினை இலக்கு வைத்து தாக்குதல் ஒன்று நடத்தப்படவுள்ளதால் விமான நிலையத்திற்கு அருகில் உள்ளவர்கள் பாதுகாப்பு இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கில்...

தொற்றால் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த 39, 76 வயதுகளையுடைய இரு பெண்களும் கொரோனாத் தொற்றால் நேற்றைய தினம் மேற்படி வைத்தியசாலையில் உயிரிழந்தனர்.

உயிரிழந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட உடுப்பிட்டி கம்பர்மலைப் பகுதியைச் சேர்ந்த 65 வயதான பெண்ணுக்கு நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த 24 வயது இளைஞன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கோவிட் தொற்றால் 71 வயதுடைய பெண் ஒருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்று காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கோவிட் சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

மேலும் வவுனியாவில் 6 மாத குழந்தை ஒன்றும் கொரோனாவால் உயிரிழந்துள்ளது. (ம-3,18,33,250)

## உயிரிழப்பைத்...

செனெகா மற்றும் ஸ்புட்னிக் தடுப்பூசிகளைப் பெற்ற 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்தார்.

சினோபார்ம், பைசர், அஸ்ட்ராசெனெகா மற்றும் ஸ்புட்னிக் தடுப்பூசிகளின் வெற்றியை ஒப்பிடுவதற்கான முதல் ஆய்வினை மேற்கோள்காட்டி, அவர் வெளியிட்ட கீச்சகப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான்கு தடுப்பூசிகளின் முடிவுகளும் டெல்டா மாறுபாட்டிற்கு முன்னும் பின்னும் தடுப்பூசி போடாதவர்களுடன் ஒப்பிடும் போது இந்த உயிரிழப்புகளைக் குறைப்பதில் பயனுள்ளதாக இருப்பது காட்டப்பட்டுள்ளது என்று பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

**யாழ். மாவட்டத்தில் 53 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 16 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 10 பேர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 08 பேர், மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் 02 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், இளவாலை பிரதேச வைத்தியசாலையில் 02 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் ஒருவர்.

**வவுனியா மாவட்டத்தில் 25 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 07 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 07 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 02 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேர்**

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்.

இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 16 பேர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 04 பேர், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் வவுனியாவில் மேலும் 244 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 244 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,33,299)

## நாடு மிக...

நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், மோசமான நிலை எனும்போது, இறப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வைரஸால் பாதிக்கப்பட்ட சுகாதார அதிகாரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதன்படி, நோயாளிகளின் எண்ணிக்கை, மருத்துவமனை சிகிச்சை திறனை விட அதிகமாக உள்ளது. தொற்று நோய் காரணமாக, மருத்துவமனை படுக்கைகள் மற்றும் தீவிர சிகிச்சை வசதிகள் என்பன நிரம்பியுள்ளன என்றும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வைரஸால் பாதிக்கப்பட்ட மருத்துவ ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மனித வளங்களில் பாரிய சிக்கல் நிலை எதிர்கொள்ளப்படுவதாக வைத்தியர் நலிந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 2 வாரங்கள்...

வதைக் கட்டுப்படுத்த சுகாதார அறிவுறுத்தல்களின்படி நாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்கு மூடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தினசரி பதிவாகும் நோய்த்தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நாட்டை முடக்குவதன் மூலம் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். (ம-3)

(மற்றொரு செய்தி உள்ளே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களின் விலையேற்றத்தை தடுக்க அரசாங்கத்தின் நடவடிக்கை என்ன?

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கேள்வி



(கொழும்பு)

பொருட்களின் விலையேற்றத்தைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன வென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒரு கிலோகிராம் சீனியின் விலை சுமார் 50 ரூபாயால் அதிகரித்துள்ளது. சந்தையில் வழமைக்கு மாறாக பால்மாக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதுடன், எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்துப்பொருட்கள், பாண் உள்ளிட்ட அநேகமான பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் போதுமானளவு மருந்துப்பொருட்கள் இருப்பதாக கூறிய அமைச்சர்கள், தற்போது தூதுவர்களிடம் மருந்துப்பொருட்களை கோரியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில், ஊடகங்கள் பட்டியல், கேள்வி மனு, முன்பதிவு தொடர்பிலான தகவல்கள் அடங்கிய தேசிய ஊடகங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தரவுக் களஞ்சியத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த தகவல்கள் அழிந்ததை, பாரதூரமான விடயமாகக் கருதி பக்கசார்பற்ற விசாரணையை நடத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரியுள்ளார். (ம-03)

# விபத்தில் உயிரிழந்தவரின் சிறுநீரகங்கள் வேறு இருவருக்கு பொருத்தப்பட்டு சாதனை

## யாழ். போதனாவில் முதல்முறையாக விசேட சத்திரசிகிச்சை வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அண்மையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

விபத்தினால் மூளைச்சாவடைந்த இணுவிலைச் சேர்ந்த தங்கராசா பிரிஞ்சன் என்ற இளைஞரின் இரண்டு சிறுநீரகங்களும் இரண்டு நோயாளிகளுக்கு தலா ஒன்று என மாற்றப்பட்டன.

சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் உயிர் வாழ்ந்த இருவருக்கும் சிறுநீரகங்கள் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை வல்லுநர்கள், உணர்வழியியல் வல்லுநர்கள், சிறுநீரக வல்லுநர்கள் மூலம் மாற்றப்பட்டன. கண்டியிலிருந்து சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவர் அழைத்துவரப்பட்டு உதவிகளும் பெறப்பட்டன.

அதிகரித்த கோவிட்-19 நோயாளர்கள் மத்தியிலும் கடந்த 18 ஆம் திகதி சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பல மணி நேரத்தையும் தாண்டி வெற்றிகரமாக நடைபெற்றதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பதில் பணிப்பாளர் மருத்துவர் ச.ஸ்ரீபவனந்தராஜா தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில், வட மாகாணத்தில் நடத்தப்பட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தனிநபர் என்பதை தாண்டி ஒருங்கிணைந்து எல்லோருடைய கூட்டு முயற்சியால் வெற்றிகரமாக அமைந்ததென சத்திரசிகிச்சையில் பங்கேற்ற மருத்துவ வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர். (ம-03,18,33,101)

## நவம்பர் மாத இறுதிக்குள்

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்கு முன்னர் இந்நாட்டு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட் தடுப்பூசி டோஸ்கள் இரண்டையும் செலுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நேற்று முற்பகல் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதத்தின் நடுப்பகுதிக்கு முன்னர் நாட்டின் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட் தடுப்பூசியை செலுத்தி நிறைவுசெய்ய எதிர்ப்பார்த்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டு குடிமக்களுக்கு தடுப்பூசி டோஸ்கள் இரண்டையும் பெற்றுக் கொடுத்த பின்னர் மூன்றாவது டோஸ் தடுப்பூசி தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ம-03)

## கோவிட் வைரஸ் தொற்றால்

# கடந்த 11 நாட்களில் 2 ஆயிரத்து 13 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் வைரஸ் தொற்றால் கடந்த 11 நாட்களில் 2 ஆயிரத்து 13 பேர் உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

ஓகஸ்ட் 14 முதல் 24 வரையான காலப்பகுதியிலேயே குறித்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன், அரச தகவல் திணைக்களம் நாளாந்தம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 14ஆம் திகதி 161 பேரும் 15ஆம் திகதி 167 பேரும் 16ஆம் திகதி 171 பேரும் 17ஆம் திகதி 170 பேரும் 18ஆம் திகதி 186 பேரும் 19ஆம் திகதி 195 பேரும் 20ஆம் திகதி 198 பேரும் 21ஆம் திகதி 183 பேரும் 22 ஆம் திகதி 194 பேரும் 23ஆம் திகதி 190 பேரும் 24ஆம் திகதி 198 உயிரிழந்துள்ளனர். (ம-03)

## நாடு முடக்கப்பட்டுள்ளமையால்

# 13 கோடியே 33 இலட்சம் ரூபாய் ரயில்வே திணைக்களத்துக்கு நட்டம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலால் 10 நாட்களுக்கு நாட்டை முடக்குவதன் மூலம் ரயில்வே திணைக்களத்துக்கு 13 கோடியே 33 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படும் என ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டை முடக்குவதால் ரயில்வே திணைக்களத்துக்கு நாளொன்றுக்கு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது. மாதமொன்றுக்கு 40 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது.

ரயில்வே திணைக்களத்துக்கு மாதமொன்றுக்கு 50 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கின்றது. ஆனால், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த பின்னர் அந்த வருமானத்தில் 10 கோடி ரூபாய் குறைவடைந்துள்ளது என்றார். (ம-03)

# கோவிட் ஏற்பாட்டுக்கான சட்டம் அமுலுக்கு வருகிறது

## தம்மிக தசநாயக்க அறிவிப்பு

(கொழும்பு)

2019 கொரோனா வைரஸ் நோய் (கோவிட் -19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி குறித்த சட்டமூலம், வாக்கெடுப்பின்றி பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

கோவிட் 19 நிலைமை காரணமாக சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட சில செயல்களை தனிநபர்களால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செய்ய முடியாத நிகழ்வுகள் குறித்தும் அதே போன்று கோவிட் சூழ்நிலையால் சில நீதிமன்றங்களுக்கு அதன் செயற்பாடுகளை தொடர முடியாத சந்தர்ப்பங்களில் மாற்று நீதிமன்றங்களை நியமிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. (ம-03)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையில் தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலைகளின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் தொற்றாளர்கள் நிரம்பி வழிகின்றனர் என்று வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றாளர்களில் அதிகமானவர்களுக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சுமார் 700 தொற்றாளர்களும் ஐ.டி.எச்.இல் 240 தொற்றாளர்களும் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 222 தொற்றாளர்களும் களுபோவில வைத்தியசாலையில் 300 தொற்றாளர்களும் வெலிசறை வைத்தியசாலையில் 182 தொற்றாளர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளடங்கலாக நிர்வாகப் பிரிவில் 350 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு 24 மணித்தியாலமும் இயங்கி வருவதுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 30 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவசர சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 10 - 15 தொற்றாளர்கள் சிகிச்சை பலனின்றி மரணமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.